# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 06 சனிக்கிழமை 20.05.2023 கதிர்191


## இது ரகசியம் அல்ல!

சொந்தக் காசில் சூனியம் வைத்துக் கொள்வதைத் தமிழர்களைத் தவிர வேறு யாராவது இந்த உலகத்தில் திறம்படச் செய்வார்களா என்பது தெரியவில்லை. நெடுங்கேணி, நைனாமடுவில் அமையவுள்ள சீன முதலீட்டுடனான சீனித் தொழிற்சாலையையும் அதற்கான கரும்பு உற்பத்திக்காக வடக்கில் இருக்கும் காணிகளை தாரை வார்க்கும் செயற்பாட்டையும் வலிந்து வாங்கி வந்திருப்பது வேறு யாருமல்லர் தமிழர்கள்தான். அதுவும் தேசியம் பேசிக்கொண்டு, தமிழர்களின் காணிகளை அரசு அபகரிக்கிறது என்பதை முன்னரங்கில் வைத்து அரசியல் செய்யக்கூடிய தமிழ்க் கட்சி ஒன்றுதான்.

இதுபோன்ற ஒருதிட்டம் வடக்கு மாகாண சபை இருந்தபோதும் முன்மொழியப்பட்டது. ஆனால், அப்போது வடக்கு மாகாண சபை விவசாய அமைச்சராக இருந்தவரான சுற்றுச்சூழலியலாளர் ஐங்கரநேசன் ☞2

## வடக்கு, கிழக்கில் வெப்பம் மேலும் அதிகரிப்பு!

வடக்கு, கிழக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும், மொனராகலை மாவட்டத்திலும் அதிகரித்த வெப்பம் நிலவக்கூடும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேநேரம், மேல், சப்ரகமுவ, மத்திய, ☞2

# நைனாமடுவில் சீனித் தொழிற்சாலைக்கு 500 ஏக்கர் “பெர்மிட்” காணிகள் கபளீகரம்

## சீன முதலீட்டில் அமையவுள்ள ஆலைக்கு இந்த நிலத்தை வழங்க ஜனாதிபதி ரணில் நேரில் தலையிட்டு உத்தரவு

(ந.லோகதயாளன்)

நெடுங்கேணி, நைனாமடுவில் கீனித் தொழிற்சாலை ஒன்றை அமைப்பததற்காக 500 ஏக்கர் நிலத்தை உடன் கையளிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வடக்கில் உள்ள அதிகாரிகளுக்கு நேரடியாக உத்தரவிட்டுள்ளார். வியாழக்கிழமை மெய்நிகர் (சூம் ஒன்லைன்) வழி அதிகாரிகளுடன் அவர் நடத்திய சந்திப்பில் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

சீனாவின்நிதிமுதலீட்டுடன்சீனஉற்பத்திக் கூட்டுத்தாபனம் இந்தத் தொழிற்சாலையை நெடுங்கேணியில் அமைக்கவுள்ளதாகக் காலைக்கதிர் நம்பகரமாக அறிகின்றது.

ஜனாதிபதி வழங்க உத்தரவிட்டுள்ள காணி, மத்திய வகுப்புத் திட்டத்தின் கீழ் தமிழ் மக்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட "பெர்மிட்" காணிகள் என்று அதிகாரிகள் கூறுகின்றனர். போரால் அந்தப் பகுதிகளில் இருந்துமக்கள்இடம்பெயர்ந்ததைத்தொடர்ந்து காடு பற்றிப்போன அந்த நிலம் தற்போது வனவளத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது. பல அழுத்தங்களுக்குப் பின்னர் அதனைவிடுவிப்பதற்கானநடவடிக்கைகளை அந்தத்திணைக்களம்தற்போது எடுத்துவரும் நிலையில் அதனை சீனித் தொழிற்சாலைக்கு வழங்க ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

மே 18 முற்பகல் 11.30 மணிக்கு சூம் வழியாக கொழும்பு மற்றும் வடக்கு அதிகாரிகளுக்கு இடையில் நடந்த கூட்டத்தில் திடீரென இணைந்துகொண்ட ஜனாதிபதி வவுனியா, அந்தக் காணிகளை உடனடியாக விடுவிக்கவேண்டும், இதுஎன்உத்தரவு ☞2

## வசந்த முதலிகேவுக்கு பிணை கிடைத்தது

ஆனைத்துப்பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே உள்ளிட்ட எண்மர் பிணையில் செய்வதற்கு மாஹர நீதிவான் நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.

ஒவ்வொருவரும் தலா ஐந்து இலட்சம் சரீரப்பிணையிலும் வாரமொரு தடவை கிரிபத்கொட நீதிமன்றத்தில் கையொப்பமிடுவதற்கும் நிபந்தனை விதித்து இந்தப் பிணை வழங்கப்பட்டது.

களனி பல்கலைக்கழக அனைத்து மாணவர் ஒன்றியத்தின் தலைவர் மற்றும் மாணவ செயற்பாட்டாளர் ஒருவரும் தலங்கம பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கானபிணைஅனுமதிநீதிமன்றத்தால் தொடர்ச்சியாக மறுதலிக்கப்படும் நிலையில் அனைத்துப்பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய ஏற்பாட்டில் பெரும் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. ☞2

# புலிகள் இயக்கத்தை மீண்டும் உருவாக்க இந்தியா முயற்சி?

## முன்னாள் போராளிகளிடம் துருவித் துருவி ரிஐடி விசாரணை

விடுதலை புலிகள் இயக்கத்தை இந்தியா மீண்டும் உருவாக்க முயற்சிக்கிறதா என்று இந்தியாவுடன் நெருக்கமான தொடர்புகளைக் கொண்டிருக்கக்கூடிய முன்னாள் போராளிக் குழுக்களிடம் விசாரணை நடத்தி வருகின்றது இலங்கையின் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு.

ஜனநாயகப் போராளிகள் கட்சியின் செயலாளர் இ.கதிர், இந்தவிசாரணைதன்னிடமும்நடத்தப்பட்டது என்று வெள்ளிக்கிழமை செய்தியாளர்களிடம் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த எட்டு ஆண்டுகளாக அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றோம். வடக்கு கிழக்கு மாகாணங்களில் எமது அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுப்பதுடன் எமது ஜனநாயக போராளிகள் கட்சி தேசிய மாநாடு



ஒன்றையும் நடத்தி இருக்கின்றது. தமிழ் தேசிய அரசியல்கட்சிகளோடுஇணைந்துபயணிக்கிறோம். ஜனநாயகக் கூட்டணியிலும் அங்கம் ☞2

## ஜனக்க ரத்நாயக்கவுக்கு எதிரான பிரேரணையை எதிர்க்க ஐக்கி மக்கள் சக்தி முடிவு

பொதுப்பயன்பாட்டுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்கவை பதவி நீக்கம் செய்வதற்கான குற்றப் பிரேரணைக்கு எதிராக வாக்களிக்கஐக்கியமக்கள்சக்திதீர்மானித்துள்ளது.

கொழும்பில் உள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை செய்தியாளர்களிடம் பேசிய எதிர்க்கட்சியின் பிரதமக் கொறடாவும் நாடாளுமன்ற உறுப்பினருமான லக்ஷ்மன் கிரியெல்ல இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆட்சியாளர்களின் இந்தத் ☞2

## மக்களின் அடிப்படை உரிமைகளைக்கூட மீறும் இந்த ஆட்சியில் ஒருபோதும் இணையமாட்டேன்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு

பேச்சு மற்றும் கருத்துச் சுதந்திரம் என்பன இலங்கை அரசமைப்பின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளபோதும் மக்களின் அடிப்படைஉரிமைகள்மற்றும் ஜனநாயக உரிமைகளை இந்த அரசு தொடர்ந்தும் மீறி வருகின்றது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். இத்தகைய மக்கள் விரோத ஆட்சியில் ஒருபோதும் இணையப்போவதில்லை.

களனி பல்கலைக்கழகத்துக்கு அருகில் வியாழக்கிழமை இடம்பெற்ற அமைதிவழி ஆர்ப்பாட்டத்தின்போது கைது செய்யப்பட்ட அனைத்துப் பல்கலைக் கழகமாணவர்ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகேயைப் பார்வையிடுவதற்காக வெள்ளிக்கிழமை ராகம வைத்தியசாலைக்குச் சென்று பார்வையிட்டார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ. அதன்



பின்னர் செய்தியாளர்களிடம் பேசும்போதேஅவர்இதனைத் தெரிவித்தார்.

‘இந்நாட்டு மக்கள் தமது ஜனநாயக உரிமைகளை நடைமுறைப்படுத்த ☞2

## மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளராக சத்தியமூர்த்தியின் நியமனத்திற்கு வடக்கில் இருந்து கடும் எதிர்ப்பு

(ந.லோகதயாளன்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் என்.சத்தியமூர்த்தியை வடக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளராகவும் நியமித்தமைக்குக்கடும்ஆட்சேபனை எழுப்பப்பட்டுள்ளது.

சத்தியமூர்த்தி சிறந்த நிர்வாகியாக இருக்கலாம், அதற்காக மாகாணத்திற்குரிய அதிகாரத்தை மத்தியின் அதிகாரி கவனிப்பதனை ஏற்றுக்கொள்ள முடியாது என வடக்கு மாகாண ஆளுநர், கடற்றொழில் அமைச்சர் ஆகியோர் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளனர்.

நாம் சத்தியமூர்த்திக்கு எதிரானவர்கள் அல்லர் என்றபோதும் கொழும்பு அரசின்அதிகாரியானஅவரை மாகாண நிர்வாகியாகவும் நியமிப்பது மாகாணத்தின் அதிகாரத்தில் கொழும்பின் நேரடித் தலையீட்டுக்கு இது வழிவகுக்கும் என்று வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானமும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பதவிக்கு, சத்தியமூர்த்திக்குப் பதில் தற்போது மாகாணத்தில் பணியாற்றும் இரு மருத்துவ அதிகாரிகளில் ஒருவரை நியமிக்குமாறு இருவரின் பெயர்கள் நேற்று பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

முன்னதாக, வடக்கு மாகாண ☞2

## பலாலி பொலிஸ் நிலைய அமைவிடம் பற்றி மனித ஊரிமைகள் ஆணைக்குழு கவனம்

ந.லோகதயாளன்.

பலாலி பொலிஸ் நிலையம் மக்கள் சென்று வர முடியாத முகாம் பகுதிக்குள் அமைந்திருப்பது குறித்து மனிதஉரிமைகள்ஆணைக் குழுகவனம்செலுத்தியுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில்உள்ளபொலிஸ்நிலையங்களில் ஒன்றான பலாலி பொலிஸ் நிலையம் அமைந்துள்ள பகுதிக்கு அந்தப் பொலிஸ் பிரிவின் கீழ் உள்ள மக்களே சென்று வர முடியவில்லை என்பது யாழ்ப்பாணம் பிராந்திய மனிதஉரிமைகள்ஆணைக் குழுவின் இணைப்பாளரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டதை அடுத்து இது தொடர்பில் ஆணைக்குழு கவனம் செலுத்தியுள்ளது.

ஏனைய பணியுடன் கூடியவாறு யாழ்ப்பாணம் மனிதஉரிமைகள்ஆணைக் குழுவின் இணைப்பாளர் பலாலி பொலிஸ் நிலையத்திற்கு ☞2

## ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட சரத் பொன்சேகாவுக்கும் விருப்பம்

ஜனாதிபதித் தேர்தலில் மீண்டும் போட்டியிடும் தனது விருப்பதை வெளிப்படுத்தியிருக்கிறார் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார். மக்கள் சக்தியின் வேட்பாளராகப் போட்டியிட வாய்ப்புக் கிடைத்தால் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்வேன் என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

இணையத்தள ☞2

## இந்திய, இலங்கை அரசுகள் செய்த அநியாயங்களை மறக்கவில்லை

### ‘மலையகம் 200’ நிகழ்வில் மனோகணேசன் சுட்டிக்காட்டு

இந்திய அரசும் இலங்கை அரசும் அன்று எமது மலையக மக்களுக்குச் செய்த அநியாயத்தை நாங்கள் இன்னும் மறக்கவில்லை என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

நுவரெலியாவில் நடைபெற்ற 'மலையகம் 200' நிகழ்வில் கலந்துக்கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்க, 1948ஆம் ஆண்டு வெள்ளையர்களிடமிருந்து நாம்சுதந்திரம்பெற்றுவிடோம் என்று கூறினார். ஆனால்



நான்கூற விரும்புவது என்னவென்றால் நாங்கள் வெள்ளையருக்கு சுதந்திரம் கொடுத்துஅனுப்பிவைத்தோம் என்பதாகும்.

200 வடங்களுக்கு முன் இந்தநாட்டில்குடியேறியஎமது மக்கள்பலதுன்பதுயரங்களை அனுபவித்து நாட்டைபொன் விலையும் பூமியாக மாற்றி காண்பித்துள்ளார்கள். அன்று ஆசியா கண்டத்தில் ஜப்பானுக்கு அடுத்தபடியாக அந்நியநாட்டுவருமானத்தைக் கொண்டிருந்த நாடு இலங்கைதான்.

தற்போது இந்த நாட்டில் டொலர் இல்லை. ☞2

## ஜனாதிபதி, பிரதமர் தலைமையில் தேசிய படைவீரர்கள் தின நிகழ்வு

14ஆவது தேசிய படைவீரர் தின நிகழ்வுகள் முப்படைகளின் தளபதியான ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன ஆகியோரின் தலைமையில் பத்தரமுல்லையில் உள்ள படைவீரர்களை நினைவு கூர்வதற்கான சதுக்கத்தில் நடைபெற்றது.

மூன்று தசாப்தங்களாக இடம்பெற்ற போரை படையினர் வெற்றிகொண்டு நேற்றுடன் 14வருடங்கள் பூர்த்தியாகின்றன. போரில் இராணுவ, விமானப்படை, கடற்படை மற்றும் சிவில் பாதுக்காப்பு படைகளை சேர்ந்த 28,619 படையினர் உயிர் நீத்தனர்.

27,000 இற்கும் அதிகமான படையினர் காயமடைந்தனர். அவர்களைக் கௌரவிக்கும் வகையில் இராணுவ சேவை அதிகார சபையினால் 2023 படைவீரர்கள் நினைவு தின நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தேசிய கீதம் இசைக்கப்பட்டதை தொடர்ந்து ஜனாதிபதி மற்றும் பிரதமரால் போரில் உயிர் நீத்த படையினருக்கு இரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

அனைத்து மத வழிபாடுகளுடன் ஆரம்பமாகிய நிகழ்வில் நாட்டின் சுயாதீனத்தன்மை மற்றும் ஒருமைப்பாட்டினை பாதுகாப் பதற்காக உயிர்த் தியாகம் செய்த இராணுவ, விமானப்படை, கடற்படை ,பொலிஸ், மற்றும் சிவில் பாதுகாப்பு படை வீரர்களை கௌரவிப் ☞2

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதனை ஆணித்தரமாக எதிர்த்துவிட்டார். முதலமைச்சராக இருந்தவரான சி.வி. விக்னேஸ்வரன் அந்தத் திட்டத்தை அனுமதிக்காத அளவிற்கு ஐங்கநேசன் அழுத்தத்தைக் கொடுத்தார். அதனால் அத்தகைய திட்டங்கள் வடக்கில் கொண்டுவரப்படவில்லை.

கரும்பு போன்ற பயிர்கள்வடக்குக்குஏற்புடையவை அல்ல என்பதே ஐங்கரநேசனின் எதிர்ப்புக்குக் காரணம். கரும்பு நீண்ட காலப் பயிர். அத்தோடு அதிகளவில் அதற்கு நீர் தேவை. இயற்கையான ஆறுகளோ பெரும் ஏரிகளோ இல்லாத வடக்குப் பகுதியில்கரும்புஉற்பத்தியை ஊக்குவித்தால்,அனுமதித்தால் அது இங்கிருக்கும் நிலத்தடி நீருக்கும் பாதிப்பாக அமையும் என்பதால் அத்தகைய திட்டங்கள் வடக்கு மாகாணத்திற்குப்பொருத்தமற்றவை என்றார் ஐங்கரநேசன். அவர் ஒரு சுற்றுச்சூழலியலாளர் என்பதால்வடக்கின்இயற்கைச் சூழலுக்கு ஏற்றபொருளாதாரத் திட்டங்களே இங்கு பொருத்தமானதாக இருக்கும் என்று ஆணித்தரமாக நம்பினார். அதில்உண்மையும்உள்ளது. நல்லதண்ணீருக்குப் பற்றாக்குறை உள்ள வவுனியா, மன்னார் மாவட்டங்களில் கரும்புச்செய்கையை ஊக்குவிப்பதுஎன்பதுவிரைவிலேயே அந்த மாவட்டங்களை பாலைவனமாக்கிவிடும்.

இதைத்தடுக்கவேண்டும் என்றால் மகாவலித் தண்ணீரை வடக்கு நோக்கித் திருப்பிவிடுவார்கள். அப்படித் திருப்பினால் மகாவலி அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் வடக்கு நிலங்களின் கட்டுப்பாடு சென்றுவிடும். நில உரிமைக்காகவும், காணி அதிகாரத்திற்காகவும் போராடி வரும் வடக்கு கிழக்கு மக்கள் தம்மிடம் இருக்கும் காணிகளை கொழும்பின் அதிகாரத்திற்குத் தாரை வார்க்கும் அரசியலாகவும்இந்தக்கரும்புச் செய்கை நகர்வுகள் இருக்கும் என்பதும் வடக்கு மாகாண சபை கரும்புச் செய்கையை மறுத்தமைக்கான அரசியல் காரணமாக இருந்தது.

ஆனால், சுற்றுச் சூழல் பற்றிய எந்த அக்கறையும் இல்லாதவர்கள், அரசியல் தெளிவோ ஞானமோ இல்லாதவர்கள், பணம் பார்ப்பது ஒன்றையே நோக்காகக் கொண்டவர்களுக்குவடக்கின் இயற்கை நீர்வளம் குறித்தோ அரசியல் குறித்தோ எந்த அக்கறையும் இல்லாமல் இருக்கலாம். அதனால் அவர்கள் இந்தத் திட்டத்திற்குப் பிள்ளையார் சுழி போட்டுக் கொடுக்கிறார்கள்.

நைனாமடுவில் அமைக்கப்படவுள்ள சீனித் தொழிற்சாலைக்காக 500 ஏக்கர்காணியைஉடனடியாக வழங்குமாறுஜனாதிபதிரணில் விக்கிரமசிங்கவே நேரடியாக உத்தரவிட்டுள்ளார். "இட் இஸ் மை ஓடர்" என்ற பதத்தைப் பயன்படுத்தி அவர் அந்த உத்தரவை வழங்கியுள்ளார். மே 18, முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தினத்தில் காலை 10 மணிக்கு என்று அறிவிக்கப்பட்டு11.30மணிக்கு சூம்மெய்நிகர்வெளியில்நடந்த அதிகாரிகளின் கூட்டத்தில், 10ஆவது நிமிடத்தில் உள்நுழைந்த ஜனாதிபதி வெறும்நான்கரைநிமிடங்கள் மட்டுமே உரையாற்றினார். அப்போதே அவர் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

அந்தக் கூட்டத்தில் அதிகாரிகள் 15 பேர் கலந்துகொண்டனர். அவர்களில் மிகப் பெரும்பாலானவர்கள் கொழும்பு அலுவலகங்களைச் சேர்ந்தவர்கள். அந்த சூம் அறையில் காணப்பட்ட ஒரே அரசியல் வாதியின்ஐ.டி சுரேன்குருசாமியினுடையது. அவர் அதுதான் இல்லை என்று மறுத்திருந்தாலும் அது அவரது ஐ.டிதான் என்பதை எங்களால் உறுதிப்படுத்தமுடிந்திருக்கிறது. அதே நேரம் இதுபோன்ற சீனித்தொழிற்சாலைத்திட்டம் ஒன்றை தாம் ஏற்கனவே அரசிடம்கையளித்திருக்கிறார் என்பதையும் குருசாமி ஏற்றுக்கொண்டிருக்கிறார்.

சுரேன் குருசாமி ரெலோ அமைப்பின் பேச்சாளர். புலம்பெயர் தேசத்திலிருந்து திரும்பியவர். ரெலோதலைவர் செல்வம்அடைக்கலநாதனின் வலது, இடது காரங்கள் எல்லாம் இப்போது இவர்தான். கிட்டத்தட்ட இவரது மூளையில்தான் கட்சி இயங்குகின்றது என்று மற்றத் தொண்டர்கள் சலித்துக்கொள்ளுமளவிற்கு கட்சியின் "திங் டாங்" இவர்தான். எனவே கட்சிக்கும் தலைவருக்கும் தெரியாமல் இந்தச்சீனித்தொழிற்சாலைத் திட்டம் முன்னகர்ந்திருக்க முடியாது.

வடக்கு மாகாண சபை பதவியில் இருந்தபோது ஆட்சியமைத்திருந்த அப்போதையதமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் ரெலோவும் அங்கத்தவராக இருந்தது. தொடக்கத்தில் இந்தக் கட்சியுடன்இருந்ததொடர்புகள் காரணமாகவேஐங்கரநேசன் மாகாண சபைக்குள் வருவதற்கானவாய்ப்புக்களும் கிட்டியிருந்தன. அப்படி அந்தக் கட்சிக்குள்ளால் வந்த ஒருவர் கரும்பு உற்பத்தித் திட்டம் வடக்கு மாகாணத்திற்குப் பொருத்தமானது அல்ல என்று கூறி அதனை நிராகரிக்க, இப்போது அதே கட்சியின் மற்றொருவர் அரசுக்கு அதனைப் பரிந்துரைத்து, வடக்கின் சுற்றுச்சூழலுக்குப் பாதகமானஅந்தத்திட்டத்தைக் கொண்டு வந்து சேர்ப்பதில் மும்முரமாக இருக்கிறார். அது பற்றிய எந்தச்சொரணையும் இன்றித் தலைமை இருக்கின்றது என்றால் தமிழ் அரசுக் கட்சித் தலைமை பரவாயில்லை என்று சொல்லலாம் போலுள்ளது.

தமிழர்களை அழிக்க வேறு யாரும் வரத் தேவையில்லை. இங்கிருப்பவர்களே போதுமானவர்கள். வாழ்க அவர்கள் பணி!

**இடிமின்னல்**

## புலிகள் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வகிக்கின்றோம்.

மே 11 பயங்கரவாத தடுப்பு பிரிவிலிருந்து எனது வீட்டிற்கு வந்து என்னை விசாரித்தார்கள். விசாரணையின் பின்னர் மே15 மீண்டும் பயங்கரவாத தடுப்பு பிரிவு கொழும்ப அலுவலகத்திற்கு வருமாறு கூறினார்கள். எனினும் கட்சி பணிகள் உள்ளதால் குறித்த திகதியில் என்னால் வரமுடியாது பிறிதொரு திகதியில் வருகிறேன் என்று கூறியிருந்தேன். அவர்கள் மே 16 எனது வீட்டுக்கு வந்துவிட்டார்கள். என்னிடம் நான்கு மணித்தியாலமும் 50 நிமிடங்களும் விசாரணை நடத்தினார்கள்.

மூன்று பேர் கொண்ட குழுவினர் இந்த விசாரணையில் ஈடுபட்டிருந்தனர். என்னையும் எனது குடும்பத்தையும் மிரட்டும் வகையில் இவர்களது விசாரணைஅமைந்திருந்தது. குறிப்பாகதமிழீழவிடுதலைப் புலிகள் இயக்கம் குறித்த இந்தியாவின் நிலைப்பாடு எவ்வாறு இருக்கிறது என்று அவர்கள் விசாரித்தனர்.

அக்டோபர் 10 இந்தியத் தலைநகர் டெல்லியில் இடம்பெற்ற மாநாடு ஒன்றில் நான் கலந்து கொண்டமை தொடர்பாக விசாரித்தார்கள். குறித்த மாநாட்டில் பயங்கரவாத சட்டம் நீக்கப்பட வேண்டும், மாகாணங்களுக்குரிய அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும், அரசமைப்பின்13ஆம்திருத்தம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்என்றவிடயங்களை நான் இந்தியாவிடம் வலியுறுத்தி இருந்தேன். அது தொடர்பிலும்விசாரித்தார்கள்.

ஜனநாயக போராளிகள் கட்சிக்கு இந்தியா என்ன ஆலோசனைகளை வழங்குகின்றது,

இந்தியா பணம் வழங்குகின்றதாஎன்றுவிசாரித்தார்கள். இங்கு என்ன செய்யுமாறு இந்திய எங்களைப் பணித்துள்ளது என்று கேட்டார்கள். இலங்கைமக்கள்சுதந்திரமாக வாழ்வதையே தாம் விரும்புகின்றனர் என்று இந்தியா அதிகாரிகள் கூறவார்களே தவிரதமிழ்மக்கள்தொடர்பாக எந்தவிதமானகருத்துக்களை அவர்கள் கூறுவதில்லை என்று நான் பதிலளித்தேன்.

இந்தியா பணம் தந்து எம்மை இலங்கை அரசுக்கு எதிராகச் செயல்பட சொல்கின்றதா என்ற தொனியில் அவர்கள் மீண்டும் மீண்டும்விசாரித்தார்கள். இலங்கை பொருளாதார ரீதியாக நெருக்கடிகளைச் சந்தித்தபோது இலங்கைக்கு முதலாவதாக உதவி செய்து, நெருக்கடியிலிருந்து மீள உதவியது இந்தியாவே என்பதை நான் சுட்டிக்காட்டினேன்.

இலங்கைஅதிகாரிகளின் இந்த விசாரணை தொடர்பாக இந்திய தூதரகம் மற்றும் ஏனைய தூதரகங்களுக்கும் மனிதஉரிமைகள்செயற்பாட்டாளர்களுக்கும் அறிக்கை கொடுக்க இருக்கின்றோம்.

முள்ளிவாய்க்கால் நினைவு தினம், தியாகி திலீபன் நினைவு தினம், மாவீரர் நாள் என்பவற்றை மேற்கொள்ளப் பணத்தை யார்வழங்குகிறார்கள்என்றும் விசாரித்தார்கள். புலம்பெயர் உறவுகளின் பங்களிப்பின் மூலமே இவற்றைச் செய்கிறோம் எமக்குஎந்த ஒருநாட்டினுடைய நிதிப் பங்களிப்பும் கிடைப்பதில்லை என்று அவர்களுக்குத் தெளிவுபடுத்தினேன்.

அவர்கள் மீண்டும் கேட்டார்கள், நினைவேந்தல் நிகழ்வுகளுக்கு இந்தியா உங்களுக்கு பணம் வழங்குகின்றதா என்று. இந்தியா விடுதலைப் புலிகளை மீள் உருவாக்கம் செய்ய முயற்சிக்கின்றதா என்பதை அறிவதில் அவர்கள் மிகத் தீவிரமாக இருந்தார்கள்.

ஜனநாயகப் போராளிகள்கட்சியினுடையஆவணங்களைத் தங்களிடம் சமர்ப்பிக்குமாறு கூறியிருக்கின்றார்கள் அவை ஆவணங்கள் தேர்தல் திணைக்களத்திடம் வழங்கப்பட்டிருக்கின்றது என்றுகூறினேன். இருப்பினும் ஆவணங்களைவழங்குமாறு தினமும் தொலைபேசி அழைப்பு எடுத்த வண்ணம் உள்ளார்கள்.

ஜனாதிபதிரணில்விக்ரமசிங்கவிற்கு ஒரு செய்தியை சொல்ல விரும்புகின்றோம். ஜனநாயகரீதியாகச்செயல் படுகின்ற எங்களை நீங்கள் இவ்வாறு அடக்குமுறைகள் மூலம் கட்டுப்படுத்த முயற்சித்தால் அது வேறு விளைவினைஏற்படுத்தும் - என்றார்.

## வடக்கு, .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடமேல் மாகாணங்களிலும், காலி, மாத்தறை மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்குட்பட்ட சில இடங்களில் மாலை அல்லது இரவு வேளையில், இடியுடன் கூடிய மழை பெய்வதற்கான சாத்தியம் நிலவுகின்றது என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (02)

## சீன .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றார்.

வவுனியா மாவட்டச் செயலாளர் மற்றும் வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் ஆகியோருக்கு அவர் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

நெடுங்கேணிநைனாமடுவில் அமையவுள்ள இந்த சீனித் தொழிற்சாலைக்கு கரும்பு விநியோகிக்கும் வகையில் வடக்கில் கரும்புச் செய்கையை ஊக்குவிக்கும் திட்டங்கள் முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், கிளிநொச்சி மாவட்டங்களில் மேற் கொள்ளப்படவுள்ளது. இதற்கென இந்த மாவட்டங்களில் உள்ள அரச காணிகளை அடையாளப் படுத்தித் தரும்படியும் அதிகாரிகளுக்கு உத்தரவிடப் பட்டுள்ளது.

மே 18 இடம்பெற்ற கலந்துரையாடலில் ஜனாதிபதி, ஜனாதிபதியின் செயலாளர், சிறு ஏற்றுமதி முதலீட்டு அமைச்சின் செயலாளர், உதவிச் செயலாளர்கள், வவுனியா மாவட்ட அரசஅதிபர் மற்றும் வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் உள்ளிட்ட 15 பேர் கலந்துகொண்டனர். ரெலோ கட்சியின் பேச்சாளர் சுரேன் குமாரசுவாமியும் இதில் கலந்துகொண்டார். எனினும் காலைக்கதிர் அவரிடம் இது குறித்துக் கேள்விஎழுப்பியபோதுதான் கலந்துகொள்ளவில்லை என்றுஅவர் மறுத்தார். இந்தத் தகவலையார்சொன்னார்கள் என்று வெளிப்படுத்தினால் இதில் உள்ள உண்மை பொய்களைச்சொல்லமுடியும் என்றார்.

இந்தக் கூட்டத்தைத் தொடர்ந்து மே 19 வெள்ளிக்கிழமை காலை இது தொடர்பாக மற்றொரு கூட்டமும் நடந்தது. பெருந்தோட்டகைத்தொழில் அமைச்சின் சிறு ஏற்றுமதி பயிர்கள் அபிவிருத்திப் பிரிவின் மேலதிகச் செயலாளர் கே.எஸ்.விஜயகீர்த்தியின் மே 16 கடிதத்தின்படி நடந்த இந்தக் கூட்டத்தில் வவுனியா மாவட்டத்தின் சகல பிரதேச செயலாளர்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் துணுக்காய்தவிர்ந்தஏனைய பிரதேச செயலாளர்களும் மன்னார் மாவட்டத்தின் மடு பிரதேச செயலரும் கலந்துகொண்டனர்.

நேற்றைய கூட்டத்தில் கரும்புச்செய்கைக்குஏற்றதாக இனங்காணப்பட்டவற்றில் அதிக இடங்கள் வனவளத் திணைக்களத்தின் பிடியிலேயேஉள்ளதாகச்சுட்டிக்காட்டப்பட்டுள்ளதனால் அந்தத் வனவளத் திணைக்களத்துடன் பேசுவது என்று முடிவெடுக்கப்பட்டது.

## வசந்த .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்போது போராட்டக்காரர்கள்பிரதானவீதியான கண்டி வீதியில் பயணிக்க முற்பட்டவேளையில் பொலிஸாரும், கலகமடக்கும் பொலிஸாரும் குறிக்கப் பட்டு போராட்டம் கட்டுப்படுத்தப்பட்டது.

இந்த நிலையில் தமது கடமைகளைச் செய்வதற்கு இடையூறு அளித்தனரர் எனத் தெரிவித்து வசந்த முதலிகேஉள்ளிட்டவர்களைப் பொலிஸார் கைதுசெய்தனர்.

## பிரேரணையை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்மானத்தை சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு எதிரான நடவடிக்கையாகக் கருதி, அதற்கு எதிராக வாக்களிப்போம், நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாத்தமையே ஜனக்க ரத்நாயக்க செய்த தவறு என்பது எமது நிலைப்பாடாகும் - என்றார்.

## சத்திய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுகாதார சேவைகள் பதில் பணிப்பாளராக வைத்திய கலாநிதி த. சத்தியமூர்த்தி நியமிக்கப்பட்டார்.

அவர் வெள்ளிக்கிழமை நண்பகல் உடனடியாகவே தனது பதவியைப் பொறுப்பேற்றுக்கொண்டார் என்று சுகாதார அமைச்சு அறிவித்தது.

வடக்கு மகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஒருவர்நியமிக்கப்படும்வரை, மருத்துவர் சத்தியமூர்த்தி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப்பணிப்பாளர் பதவிக்கு மேலதிகமாக இக்கடமையை ஆற்றுவார் என்றும் சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப் பாளராக இருந்த பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர் அண்மையில் திடீரென இடமாற்றம் செய்யப் பட்டிருந்தார். அவர் தனது கடமைக்கு வெளியே, வடக்கின் அரசியல் விவகாரங்களிலும் மூக்கை நுழைக்கிறார் என்று வழங்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் அவர் இடமாற்றம் செய்யப்பட்டார். அவரது வெற்றிடத்திற்கே சத்தியமூர்த்தி பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

## ஜனாதிபதி, ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதற்கான வாத்தியங்கள் இசைக்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து ஜனாதிபதி, பிரதமர், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன,

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன், உள்ளிட்ட அமைச்சர்கள், தேசிய பாதுகாப்பு தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஓய்வு பெற்ற ஜெனரல் கமல் குணரத்ன, பாதுகாப்பு பதவி நிலை பிரதானி ஷவேந்திர சில்வா தலைமையிலான முப்படைகளின் தளபதிகள், பொலிஸ்மா அதிபர், சிவில் பாதுகாப்புதிணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம், பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா உள்ளிட்ட முன்னாள் முப்படைகளின் தளபதிகள், இராணுவத்தினர் மற்றும் இராணுவத்தினரின் குடும்ப உறுப்பினர்கள், ஆகியோரால் படைவீரர்கள் நினைவேந்தல் சதுக்கத்தில் மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

## இந்திய, .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்டேலிங் பவுண்ஸ் இல்லை. இதற்கு யார் காரணம்? நமது உழைப்பிற்கு ஆட்சியாளர்கள் உரிய இடம் வழங்கவில்லை. அன்று இந்த நாட்டில் வெளிநாட்டு வருமானம் அதிகமாக இருந்தபடியால் சிங்கப்பூர், மலேசியா நாடுகளின்நிறுவுனர்கள்எமது நாட்டை பாராட்டினார்கள். அதற்குக் காரணம் எமது மக்களின் உழைப்பு.

அவ்வாறு நாட்டின் பொருளாதாரஅபிவிருத்திக்காக உழைத்த எமது மக்களின் குடியுரிமையையும் வாக்குரிமையையும் பறித்தார்கள். அரசியல் அநாதைகளாக்கினார்கள். நாங்கள் குடியுரிமையை இழந்து வாக்குரிமையை இழந்த பொழுதும்கூட நாங்கள் உழைத்துக் கொண்டிருந்தோம்.

1964 ஆண்டில் சிறிமா - சாஸ்த்திரி ஒப்பந்தத்தை எங்களையும் எங்களது மக்களையும் கேட்காமலேயே செய்துக்கொண்டார்கள். அந்த ஒப்பந்தத்தின்படி எமது மக்களை ஆடு மாடுகளைப் போல இந்தியாவிற்கு அழைத்துச் சென்றார்கள்.

இந்திய அரசும் இலங்கை அரசுமும் அன்று எமது மக்களுக்குச்செய்த அநியாயத்தை நாங்கள் இன்னும் மறக்கவில்லை. எமது மக்களை நாடு கடத்தாமல் இருந்திருந்தால் நாடாளுமன்றத்தில் இந்திய வம்சாவளி மக்கள் சார்பில் 25 நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் இருந்திருப்பார்கள்.

இன்று நாங்கள் கேட்பது எங்களது சமூகத்தைத் தேசிய இனமாகப் பிரகடனப்படுத்தவேண்டும் என்கிற கோரிக்கைதான்.

இந்த நாட்டில் வாழும் வடகிழக்கு மக்கள், முஸ்லிம் மக்கள், சிங்கள மக்கள் ஆகியோருடன் மலையக இந்திய வம்சாவளி மக்களும் இணைத்துக்கொண்டால்தான் அதுஇலங்கைநாடு. எங்களை ஒதுக்கிவைத்தால் இலங்கை நாடு என்று ஏற்றுக்கொள்ள முடியாது. எங்களையும் ஒரு தனித் தேசிய இனமாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

மலையகமக்கள்குடியேறி 200 வருடங்களாகிவிட்டது. எங்களுக்கு உரிமை இல்லையென்று ஒப்பாரி வைக்கமாட்டோம். எமது மக்களின் உரிமைகளை பெற்றுக்கொள்ளும் வரை நாம் அகிம்சை வழியில் போராடுவோம் - என்றார்.

## மக்களின் , ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுதந்திரம் இருக்கவேண்டும். அரசு இதனை இல்லாதொழிப்பதை எதிர்க்கட்சி என்ற ரீதியில் வன்மையாக நிராகரிக்கின்றோம்.

தேர்தலை இடைநிறுத்தி சர்வாதிகார ஆட்சியை மேற்கொண்டு மக்களின் அடிப்படைஉரிமைகளைக்கூட இந்த அரசு மீறி வருகின்றது. இவ்வாறான போக்குடைய அரசுடன் எனக்கோ அல்லது மக்களுடன்தொடர்புள்ளஎமது கட்சியில்உள்ளவருக்குமோ எந்தத் தொடர்பும் இல்லை. இந்த மக்கள் விரோத ஆட்சியில் ஒருபோதும் இணைந்துகொள்ளப் போவதில்லை.'-என்றார். (02)

## பலாலி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேரில் செல்ல முயன்றபோது வசாவிளானில் அவர் தடுத்து நிறுத்தப்பட்டார். இதன் மூலம் தனது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்ட விடயம் உண்மையானது என்பதை அவர் அறிந்துகொண்டார்.

பலாலி பொலிஸ் நிலையத்திற்குச்சென்றபோது தான் தடுத்து நிறுத்தப்பட்ட தகவலை இணைப்பாளர் உறுதிப்படுத்தினார். இது தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமையகத்தின் கவனத்திற்குக் கொண்டு சென்றிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

மக்கள் பணியாற்ற வேண்டிய அரச அலுவலகம் ஒன்று அமைந்துள்ள இடம்வரை மக்கள் சென்று வரவேண்டும் அல்லது மக்கள் சென்று வரும் பகுதிக்கு அலுவலகம் மாற்றப்படவேண்டும் என்ற கோரிக்கை அனுமதிக்காகத் தலைமைப் பணிமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்ப்பாணம் இணைப்பாளர் கனகராஜ் தெரிவித்தார்.

## ஜனாதிபதித் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

2009ஆம் ஆண்டு போரை முடிவுக்கு கொண்டு வரும் தருவாயில் இருந்தபோது ஜனவரி 31 ஆட்சியாளர்களால் போர் நிறுத்தம் ஏற்படுத்தப்பட்டது. அதன் ஊடாக விடுதலைப் புலிகள் முன்நோக்கிவந்தனர். அவ்வாறான நிலையில் நான் இருக்கவில்லை என்றால், அன்று போரில் தோல்வியடைய நேரிட்டிருக்கும்.

போரில் வெற்றி பெறுவதற்கான வாய்ப்பு நெருங்கும் நேரத்தில் நடவடிக்கைகளுக்கான பொறுப்பை ஜகத் ஜயசூரியவிடம் வழங்குமாறு அன்றைய பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ என்னிடம் கோரினார்.

போர் வெற்றியில் ராஜபக்ஷவினருக்கு பெரிய பங்கு இல்லை. போர் வெற்றியின் பின்னர் அவர்கள் போர் வெற்றியை தமதாக்கிக்கொண்டனர் என்பதே உண்மையாகும்.

அதேவேளை எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுமாறு சிலர் அழைப்பு விடுக்கின்றனர். ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் வேட்பாளராகப் போட்டியிட வாய்ப்பு கிடைத்தால் ஏற்றுக்கொள்ள விருப்பத்துடன் இருக்கின்றேன் -என்றார்.

இருப்பினும் ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் சஜித் பிரேமதாசவை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்துவது என்று கட்சியின் செயற்குழு அண்மையில் கூடிமுடிவெடுத்திருக்கின்றது.

விளம்பரத் தொடர்புகளுக்கு
தொலைபேசி இலக்கம்
076 443 80 22






காலைக்கதிர்
Kalaikkathir

# கொழும்பு துறைமுகத்தில் சிக்கியுள்ள கோடிக்கணக்கான போதைப்பொருள்

டுபாயில் இருந்து நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்ட கொள்கலனில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 8000 கிலோவுக்கும் அதிக மான நிகோடின் அடங்கிய போதைப் பொருளை இலங்கை சுங்கத்துறை துறைமுகக் கட்டுப்பாட்டு பிரிவினர் கைப்பற்றியுள்ளனர்.





இந்த போதைப்பொருள் கையிருப்பின் பெறுமதி 16 கோடி ரூபாவிற்கும் அதிகமாகும் எனவும், 50கிராம்கொண்ட160,200பொதிகள் என போதைப்பொருள் கையிருப்பு வைக்கப்பட்டிருந்ததாகவும்இலங்கை சுங்கப் பிரிவு தெரிவித்துள்ளது.

இலங்கையின்பிரதானவர்த்தக நிறுவனமொன்றின் போலிப் பெயரைப் பயன்படுத்தி இந்த போதைப் பொருள் கையிருப்பு இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகவும் சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மூத்த சுங்க இயக்குநர் யு.கே.அசோக ரஞ்சித் மற்றும் சிரேஷ்ட பிரதி சுங்கப் பணிப்பாளர் திருமதி சாந்தனி செனவிரத்ன ஆகியோரின் அறிவுறுத்தலின் பேரில் இந்தச் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டதாக சுங்கப் பிரிவினர்மேலும்தெரிவித்தனர். (5)

# காணாமல்போன யுவதி மீட்பு!

அத்தனகல,ஒகடபொலபகுதியில் இருந்து காணாமல்போன யுவதி நேற்றிரவுகண்டுபிடிக்கப்பட்டுள்ளார். இந்தத் தகவலை யுவதியின் தாயார் வெள்ளிக்கிழமை காலை ஊடகங்களிடம்உறுதிப்படுத்தினார்.

பாத்திமா இல்மா (வயது 17) என்ற குறித்த யுவதி வியாழக் கிழமை காலை முதல் காணாமல்போயிருந்தார். இது தொடர்பில் பொலிஸாருக்கும் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பில் யுவதியின் தாயார் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

தொலைபேசி பாவிக்க வேண்டாமென மகளிடம் கூறினேன். இதனால் இருவருக்கும் இடையில சிறு தர்க்கம் ஏற்பட்டது. இதையடுத்து அவர் காணாமல்போயிருந்தார்.



இந்நிலையில், நேற்றிரவு 9 மணியளவில் தெஹிவளை பொலிஸாரிடமிருந்து, மகள் இருப்பதாகத் தகவல் கிடைத்தது. பின்னர் இரவு 11 மணியளவில் மகளை நாம் பொறுப்பேற்றோம்.- என்றார். யுவதிதனதுநண்பர்களின் வீட்டுக்குச் சென்றிருக்கக் கூடும் எனவும் குடும்பத்தினர் தெரிவித்தனர். (02)

# இந்தியாவில் இருந்து சட்ட விரோதமாக பொருள் கொண்டுவந்த இருவர் சிக்கினர்

இந்தியாவிலிருந்து அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமாக கடலட்டைகளைக் கொண்டுவருவதாக கற்பிட்டி விஜய கடற்படையினருக்குக் கிடைக்கெப்பெற்ற இரகசியத் தகவலுக்கமையசின்னஅறிச்சாறு கடற்கரைப்பகுதியில்படகொன்றை முற்றுகையிட்டுள்ளனர்.

இதன்போது 193 கிலோ கிராம் உலர்ந்த கடலட்டைகள், 33 ஆயிரத்து 600 ஷாம்போ பக்கற்றுகள், 198 பாம் போத்தல்கள் மற்றும் ஒரு குளிரூட்டி ஆகியன கைப்பற்றப்பட்டுள்ளன.

ஆனவாசல்பகுதியைச்சேர்ந்த 56மற்றும்28வயதுடையஇருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என கடற்படையினர் தெரிவித்தனர்.



கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களுடன் கைப்பற்றப்பட்ட கடலட்டைகள், ஷாம்போ பக்கெற்றுகள், பாம் போத்தல்கள் மற் றும் குளிரூட்டி ஆகியன கட்டு நாயக்க சுங்கத் திணைக்களத்தினரிடம்ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர். (5)

# மூன்று குற்றச்சாட்டுக்களில் இருந்து விடுவிக்கப்பட்டார் தனுஷ்க குணதிலக



பெண் ஒருவரை பாலியல் வன்கொடுமைசெய்தமைஉள்ளிட்ட குற்றச்சாட்டுக்கள்உட்படகிரிக்கெட்வீரர் தனுஷ்க குண திலக்கவுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள4குற்றச்சாட்டுக்களில் 3 குற்றச்சாட்டுக்கள் நீக்கப்படுகின்றன என ஆஸ்திரேலிய அரசாங்க சட்டத்தரணி டவுனிங் சென்டர் நீதிமன்றில் அறிவித்தார்.

தனுஷ்க குணதிலக்கவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள நான்கு குற்றச்சாட்டுகளில் ஒன்றை முன்வைத்து எஞ்சிய மூன்று குற்றச்சாட்டுகள் வாபஸ் பெறப்படும் எனவியாழக்கிழமைவழக்குவிசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது அரசாங்க சட்டத்தரணி ஹக் பதின்டவுனிங்சென்டர்நீதிவானிடம் உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

அதை ஏற்றுக்கொண்ட மாஜிஸ்திரேட் கிளாரி ஃபர்னான், மூன்றுகுற்றச்சாட்டுகளையும்இரத்து செய்து உத்தரவிட்டார்.

இதன்படி, தனுஷ்க குண திலக்கவுக்கு எதிராக அரசாங்க சட்டத்தரணி சுமத்த தீர்மானித்த குற்றச்சாட்டு பெண்ணின் அனுமதியின்றி உடலுறவு கொண்ட குற்றச்சாட்டாகும் என ஆஸ்திரேலிய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.இந்தவழக்குஜூலை 13ஆம்திகதிமீண்டும்விசாரணைக்கு வருகிறது. (5)

# ஆசிரியரின் கடும் தாக்குதலில் படுகாயமடைந்தார் மாணவன்

வெலிகம அர்பா தேசிய பாடசாலையில்கற்பிக்கும்ஆசிரியர் ஒருவர்குறித்தபாடசாலையில்11ஆம் ஆண்டில் கல்வி கற்கும் மாணவர் ஒருவரை கம்பியால் கடுமையாக தாக்கியதாக வெலிகம பொலிஸார் தெரிவித்தனர். தாக்குதல் காரணமாக மாண வன் மாத்தறை பொது வைத்தியசாலையில்பெற்றோரால் சேர்க்கப்பட்டு மூன்று நாள்களாக சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

ஆசிரியையின் கொடூரமான தாக்குதலால் காயமடைந்த மாணவன், நடந்த சம்பவத்தை தனது தாயிடம் தெரிவித்தார். அதன்பின்னர்பெற்றோர்வெலிகம பொலிஸ் நிலையம் சென்று தாக்குதல் சம்பவம் தொடர்பில் முறைப்பாடு செய்ததாக வெலிகம பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்குதலுக்குஉள்ளானமாணவன் மற்றும் அந்த பாடசாலையில் ஒன்பதாம் ஆண்டில் கல்வி கற்கும் ஆசிரியரின் மகனுடன் ஏற்பட்ட பிரச்சினை காரணமாகவே இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். பாடசாலை இடைவேளை முடிந்ததும் சம்பந்தப்பட்ட ஆசிரியர் மாணவனின் வகுப்பிற்கு வந்து என் மகனை ஏன் அடித்தாய் எனக் கேட்டு மாணவனை வகுப்பிலிருந்து வெளியே இழுத்து கம்பியால் தாக்கியுள்ளார். பின்னர் மாணவனை கல்லூரி மைதானத்தை நோக்கி இழுத்துச் சென்றார். அதை பார்த்த மற்றொரு ஆசிரியர், ஆசிரியரின் பிடியில் இருந்துமாணவனை மீட்டுள்ளார்.

இந்தத் தாக்குதல் தொடர்பில் குறித்த ஆசிரியருக்கு எதிராக வெலிகமபொலிஸ்மற்றும்பிரதேச கல்வி அலுவலகத்தில் பெற்றோர் முறைப்பாடுசெய்துள்ளனர். கடந்த 17ஆம்திகதிகுறித்தமுறைப்பாட்டை விசாரிப்பதற்காக இருதரப்பினரும் வெலிகமபொலிஸ்’க்குஅழைக்கப் பட்டதாகவும் வெலிகம பொலிஸ் தலைமையக பரிசோதகர் டி. எம். அபேசேகரவின் பணிப் புரையின் பிரகாரம்பொலிஸ்சிறுவர் மற்றும் மகளிர்பணியகம்விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (5)

# இராணுவத்தினருக்குப் பதவியுயர்வுகள்

இலங்கைஇராணுவம்மற்றும் கடற்படை அதிகாரிகள் பலருக்கு பதவிஉயர்வுவழங்கப்பட்டுள்ளது.

நேற்று (வெள்ளிக்கிழமை) தேசிய இராணுவ வீரர்கள் தினக் கொண்டாட்டத்துடன்இணைந்துஇந்த பதவிஉயர்வுவழங்கப்பட்டுள்ளது.

இதன்படி இலங்கை இராணுவத்தின் 402 அதிகாரிகளும், 3 ஆயிரத்து 348 இதர நிலைகளும் அவர்களின் அடுத்த தரத்துக்குப் பதவி உயர்வு பெற்றவுள்ளனர்.

இதேவேளை இலங்கை கடற்படையின் 1,731 அதிகாரிகளுக்கும் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (5)

# நாட்டில் பரவும் வைரஸ் காய்ச்சலுக்கு பரசிற்றமோலை மட்டும் பாவிக்கவும்

நாட்டில் தற்போது வேகமாக வைரஸ் காய்ச்சல் பரவிவரும் நிலையில், பெரசிட்ட மோல் அல்லாத மருந்துகளைப் பயன் படுத்த வேண்டாம் விசேட வைத்தியர் உபுல்திசாநாயக்கபொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.






நாட்டில் வைரஸ் காய்ச்சல்,டெங்குமற்றும் இன்புளுவென்சா என 3 காய்ச்சல் வகைகள் பரவி வருகின்றன எனத் தெரிவித்துள்ள அவர்இதில்தங்களுக்கு ஏற்பட்டுள்ள காய்ச்சல் எந்தவகைஎனஅறியாமல் பெரசிடமோல் அல்லாத மருந்துகளைப் பயன்படுத்த வேண்டாம்எனஅவர்தெரிவித்துள்ளார்.

பெரசிட்டமோல் அல்லாத வலி நிவாரணி எடுத்தால் இரத் தக்கசிவு ஏற்பட்டு ஈரல் பாதிக்கப்படுவதுடன் மரணம் ஏற்படக்கூடிய நிலைமை ஏற்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இன்புளுவென்சா மிகக் கடுமையாகப்பரவும்என்றும்,நோய் எதிர்ப்புச் சக்தி உள்ளவர்களுக்கு வந்தால், இரண்டு அல்லது மூன்று நாள்களுக்குக் காய்ச்சலும், நீண்ட நாள் இருமலும் வரலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதனால் நீண்டகால சுவாச நோய் உள்ளவர்களுக்கு பெரிய அளவில் பிரச்சினைகள் ஏற்படாது என்றும்,சுவாசநோய்உள்ளவர்கள் முதல்முதியவர்கள்வரைஅனைத்து அரச வைத்தியசாலைகளிலும் காய்ச்சலுக்கான வைரஸ் தடுப்பு மருந்துகள் இருப்பதாகவும் வைத்தியர் உபுல் திசாநாயக்க மேலும் குறிப்பிட்டுள்ளார். (5)



காலைக்கதிர் Kalaikkathir


# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com


## என்ன சொல்ல விரும்புகிறது இலங்கை?

நம்பநடநம்பிநடவாதேஎன்பார்கள். இந்தியாவுடனான இலங்கையின் உறவு அந்த வகையிலானதுதான் என்பதை இலங்கையின் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு அதிகாரிகள் நிரூபித்துவிட்டார்கள். இந்தியா என்னதான் கொழும்புக்கு நெருக்கமாக, இணக்கமாக, நட்பாக நடந்துகொண்டாலும் அதனை நம்பி நடக்காது கொழும்பு என்பதை அவர்களது நடவடிக்கைகள் புரிய வைத்துள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை இலங்கையில் மீண்டும் உருவாக்கும் நோக்கத்துடன் இந்தியா செயற்படுகின்றாத என்பதை ஜனநாயகப் போராளிகள் கட்சியின் செயலாளரிடம் விசாரணை நடத்தித் தெரிந்துகொள்ள முயன்றிருக்கிறார்கள் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு அதிகாரிகள். அதனை பொது வெளியில் பகிரங்கப்படுத்தியிருக்கிறார் கட்சியின் செயலாளர் கதிர்.

இப்படியொரு விசாரணை நடத்தப்பட்டால் அது இந்தியாவிற்குத் தெரியவராது என்று கருதி இலங்கை அதிகாரிகள் நடந்தார்கள் என்று சொல்ல முடியாது. இலங்கை முழுவதும் அதிலும் குறிப்பாக வடக்கு கிழக்கில் தனது உளவுக் கரங்களை ஆழ ஊடுருவ வட்டுள்ள இந்தியா, அறிக்கைகளுக்காகவும் தகவல்களுக்காகவும் பணத்தை வாரிக் கொட்டும் இந்தியாவிற்கு இத்தகைய தகவல்கள் அடுத்தடுத்த நிமிடங்களிலேயே கிடைக்கும் என்பது தெரிந்துதான் இலங்கை அதிகாரிகள் இதனைச் செய்கிறார்கள்.

நம்ப நடந்தாலும் நம்பி நடக்கும் நிலையில் தாம் இல்லை என்பதை அவர்கள் டில்லிக்கு உணர்த்த முயற்சிக்கிறார்கள் என்றே கொள்ளவேண்டும்.

ஜனநாயகப் போராளிகள் கட்சி என்பது விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து, இறுதிப் போரின் போது தப்பி வந்து அரச படைகளிடம் சரணடைந்து மறுவாழ்வு பெற்றவர்களைக் கொண்டு அமைக்கப்பட்ட ஒரு கட்சி. அவர்களின் உருவாக்கம், பின்னணி குறித்து தமிழ் மக்களிடமே இன்னும் சந்தேகங்கள் இருக்கின்றபோதும் அவர்களை இந்தியா ஓரிரு தடவைகள் புதுடில்லிக்கு அழைத்துப் பேச்சு நடத்தியிருக்கிறது. இங்கேயும் இந்தியத் தூதரக அதிகாரிகளால் அவர்கள் பெரிதும் வரவேற்கப்படுகிறார்கள்.

இந்தப் பின்னணியில்தான் கடந்த ஐப்பசி மாதம் டில்லியில் நடந்த மாநாடு ஒன்றுக்குச் சென்று வந்ததை முன்வைத்துத் தன்னிடம் விசாரணை நடத்தப்பட்டதாக கதிர் கூறுகின்றார். அந்த மாநாட்டுக்கு அவர் சென்று வந்தது இரகசியமாக நடந்த ஒன்றல்ல. அது பற்றிய செய்திகள் அப்போதே ஊடகங்களில் வெளியாகி இருந்தன. கிட்டத்தட்ட 6 மாதங்கள் கடந்த பின்னர் அது பற்றி இப்போது அவரிடம் விசாரணை நடத்த வேண்டிய தேவை, அவசரம் என்ன வந்தது? அதிலும் புலிகள் இயக்கத்தை மீளுருவாக்கம் செய்யும் நோக்கில் இந்தியா செயற்படுகின்றதா என்பதை அவரிடம் நேரடியடையாகவே கேட்டு அது இந்தியாவின் காதுகளை எட்டும் வகையில் செயற்படவேண்டிய தேவை என்ன வந்தது?

இவற்றுக்கெல்லாம் இலங்கை அதிகாரிகள் ''இதுவொரு வழக்கமான விசாரணை'' என்று பதில் கூறுவார்களாயினும் அவர்கள் இந்தியாவிற்கு தெளிவான செய்தி ஒன்றை அனுப்ப முயற்சிக்கிறார்கள் என்பது மட்டும் தெளிவாகத் தெரிகின்றது. இராஜதந்திர மொழியில் இந்தியா அதனைப் புரிந்துகொள்ளும் என்பதும் அவர்களுக்குத் தெரியும். அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, அதிகாரத்திற்கு வந்தது முதல் இன்னும் புதுடில்லிக்குச் செல்ல முடியாமல் இருந்தவரும் நிலையில், அதிகாரிகள் மூலமான இந்தச் செய்தியின் குறிப்பு அதற்கான பயன்களைக் கொடுக்குமா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

# அரசுக்கு மற்றுமொரு பலப்பரீட்சை: மே 24 ஆம் திகதி '113' கிடைக்குமா?

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்கவை பதவி நீக்குவதற்கான பிரேரணைமீதானவாக்கெடுப்பு மே 24 நாடாளுமன்றத்தில் நடைபெறவுள்ள நிலையில், அது நிறைவேற்றப்படுமா என்பது தொடர்பில் சர்ச்சை எழுந்துள்ளது. ஆளும்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சுமார் 10 அமைச்சர்கள் தற்போது வெளிநாட்டில் இருப்பதே இதற்குக் காரணம் எனக் கூறப்படுகின்றது என சிங்கள இணையத்தளம்ஒன்றுசெய்தி வெளியிட்டுள்ளது.

ஆளும் கட்சிக்கு நாடாளுமன்றத்தில் 120 நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு உள்ளது, இந்த 10 பேரும்வாக்குப்பதிவின்போது அவையில் இல்லை என்றால் அந்த எண்ணிக்கை 110 ஆகிவிடும்.

இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டுமானால், அன்றைய தினம் ஆளும் கட்சி 113 உறுப்பினர்களின் பெரும்பான்மையைப் பெற வேண்டும். இதற்கு மேலதிகமாக மொட்டுக் கட்சியில் உள்ள சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏற்கனவே மஹிந்த ராஜபக்ச மற்றும் நாமல்ராஜபக்சஆகியோரைச் சந்தித்து, தமது மனச்சாட்சிக்கு இணங்கஇந்தப்பிரேரணைக்கு ஆதரவாகவாக்களிக்கமுடியாது எனத்தெரிவித்துள்ளனர்என்று கூறப்படுகின்றது.

அந்தக்குழுவில்சுமார் 20 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளடங்குகின்றனர்என்றும் தெரியவருகின்றது. எனினும், குறித்த பிரேரணை நிச்சயம் நிறைவேறும்எனஆளுங்கட்சி அறிவித்துள்ளது. (02)

# பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் நாடாளுமன்ற செயலாளர் நாயகத்துக்குக் கடிதம்



நாடாளுமன்ற விவாதத்தை நேரில் காண சந்தர்ப்பம் வழங்குமாறு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்கவுக்குகடிதம்ஒன்றை அனுப்பியுள்ளார்.

மேற்படி கடிதம் கடந்த வியாழக்கிழமை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது,

எதிர்வரும் 24 ஆம் திகதி இடம்பெறவுள்ளவாக்கெடுப்பை காண்பதற்கு தனக்கும் தனது இரண்டு பிள்ளைகளுக்கும் சந்தர்ப்பம்வழங்குமாறுகோரியே குறித்த கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளமைகுறிப்பிடத் தக்கது. (5)

# இலங்கைக்கு தொடர்ந்தும் ஆதரவளிக்க சீனா தயார்



சீனாவின் வாங்யூபோ மாகாணத்துக்கும்இலங்கைக்கும் இடையில் நெருங்கிய ஒத்துழைப்பை ஏற்படுத்துவதற்கானவழிமுறைகளை ஆராயுமாறு யுன்னான் மாகாண ஆளுநர் வாங் யூபோ தெரிவித்துள்ளார்.

வாங் யூபோ மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவிற்கும் இடையில் அலரி மாளிகையில் இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் கல்வி மற்றும் தொழிநுட்ப திறன் மேம்பாட்டிற்கு இலங்கைக்கு தொடர்ந்தும் ஆதரவளிக்க தயாராகஇருப்பதாகவும்அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை நேற்று கொழும்பின் சில முக்கிய பகுதிகளை பார்வையிட்டுள்ளதுடன் கண்டி, பொலன்னறுவை மற்றும் கிழக்கு மாகாணத்துக்கு விஜயம் செய்யவுள்ளார்.அத்துடன்குறித்த பகுதியிலுள்ள பாடசாலைகளுக்கு 25 மில்லியன் ரூபா பெறுமதியான பாடசாலை உபகரணங்கள் மற்றும் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது, (5)

# சுற்றுலா முகவர் சங்க மாநாடு இந்த முறை இலங்கையிலாம்!

## ஹரின் பெர்னாண்டோ கூறுகிறார்



இந்திய சுற்றுலா முகவர் சங்கமாநாட்டை இந்த வருடம் இலங்கையில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜூலைமாதத்தில் இந்தமாநாட்டை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சுற்றுலா அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.குறித்த மாநாட்டில் 450 உயர்மட்ட வர்த்தக பிரதிநிதிகள் பங்கேற்கவுள்ளனர் எனவும்அவர்தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் இலங்கையின் சுற்றுலாத்துறைக்கு நன்மை பயக்கும் வகையில் அமையும் என அவர் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (5)

# மேலும் சில பொருள்களுக்கு விலை குறைக்க அவதானம்!



டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதியின் பலனைமக்களுக்குவழங்கும் வகையில்அரசாங்கம்விசேட வேலைத்திட்டமொன்றை அமுல்படுத்தி வருவதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

ருவன்வெல்ல பகுதியில் நேற்று (வெள்ளிக்கிழமை) இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துரைக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

டொலரின் பெறுமதி குறைவடையும்போதுபொருள்களின் விலைகளும் நியாயமான முறையில் விதிக்கப்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் இந்த விடயம் தொடர்பில் நிதி அமைச்சின் வர்த்தக கொள்கைத் துறை, மற்றும் நுகர்வோர் விவகார அமைச்சு என்பன ஆராய்ந்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பாடசாலை உபகரணங்கள் உள்ளிட்ட ஏனைய அத்தியாவசியப் பொருள்களின் விலைகளைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் எனவும் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய மேலும் தெரிவித்துள்ளமைகுறிப்பிடத்தக்கது. (5)


OKAYA
ELECTRIC VEHICLES
dsl
We lead the way...!
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை
விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
FAAST-F2T
80-85 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
FREEDOM
70-75 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
Rs.550,000/- இருந்து
வண்ணத்தெரிவுகள்:
இந்தியாவில் அதி வேகமாக
விற்பனையாகும் மின்சார வாகனம்
2 வருட உத்தரவாதம்
3 இலவச சேவைகள்
Visit DSL EV Experience Center : # 525, Union Place Colombo 02
Hotline - 070 300 9555

காலைக்கதிர் Kalaikkathir

# உரலார் கேள்வியும் உலக்கையார் பதிலும்




**1. உரலார் கேள்வி:-** அண்மையில் உங்களைக் கலங்கச் செய்த விடயம் பற்றிச் சொல்லுங்களேன்.

**உலக்கையார் பதில்:-** என் மனச்சிகரத்தில் இருந்த ஒருவரின் மறைவுச் செய்தியைத்தான் தங்களின் கேள்விக்குப் பதிலாய்ச் சொல்ல வேண்டும். யாழ்ப்பாணத்தில் கடுமையாகப் போர் நடந்து கொண்டிருந்த காலத்தில் ஒருசில வைத்தியர்கள், எத்தனையோ நாடுகளுக்கு உயர்ந்த வசதிகள் பெற்றுச் செல்லும் வாய்ப்பிருந்தும், அவற்றை நிராகரித்துத் தம் உயிரையும் துச்சமென மதித்து நம் இனத்திற்காகப் பாடுபட்டதை யாழ் மக்கள் என்றும் மறக்க மாட்டார்கள்.

போருக்குப் பயந்து யாழ் மக்களை அனாதரவாக விட்டுவிட்டு ஒடாது தாங்கி நின்ற, டாக்டர் சிவசூரியா, டாக்டர் கணேசரட்ணம், டாக்டர் பொன்னம்பலம், டாக்டர் நாகேந்திரா, டாக்டர் சிவகுமாரன் டாக்டர் கணேசமூர்த்தி தம்பதியர், டாக்டர் ஆனந்தராஜா, டாக்டர் ஜெயமனோகரன் போன்ற வைத்தியர்களும் நம் இனத்திற்காய்த் தியாகம் செய்த உண்மைப் போராளிகளேயாம்.

அக்காலத்தில் இவர்கள் செய்த சேவையை இன்று நாம் நினைத்தும் பார்க்க


டாக்டர் எஸ். சிவகுமாரன்

முடியாது. குண்டுகள் விழுந்து வெடித்துச் சிதறிய உடலங்களோடு, உயிருள்ள மனிதர்களை 'ரக்டர்' வண்டிகளில் கொண்டு வந்து குவிக்க, அத்தனை பேர்களுக்கும் அறுவைச் சிகிச்சை செய்து காத்த டாக்டர் கணேசரட்ணம், டாக்டர் பொன்னம்பலம், டாக்டர் ஜெயமனோகரன், டாக்டர் ரவிராஜ் போன்றோரின் சேவையையும், மருந்துகளும் வசதிகளும் இல்லா அக்காலத்தில், தத்தம் துறை சார்ந்து மக்களின் உயிர் காக்கப்பாடுபட்ட, முன் சொன்ன மற்றைய டாக்டர்களின் சேவையையும் யாழ் வரலாறு பொன் எழுத்துக்களில் பொறித்து வைத்திருக்கும் என்பது மட்டும் நிச்சயம்.

அந்த பெரிய மனிதர்களில் ஒருவரான டாக்டர் எஸ். சிவகுமாரன் அவர்கள் ஒரு சில தினங்களுக்கு முன்பு காலமானார். அச்செய்தியால் நான் மிகவும் அதிர்ந்து போனேன். நான் அதிர்ந்து போனதற்குக் காரணம் அவர் என்மீது கொண்டிருந்த அன்பும், பரிவும், அக்கறையும் மட்டுமல்ல. இவற்றைக் கடந்தும் என் அதிர்வுக்கான பல காரணங்கள் இருந்தன.

யாழ்ப்பாணத்தில் எங்கள் கம்பன் கழகத்தால் வழங்கப்பட்ட 'மகரயாழ்' விருதினை முதன் முதலாக டாக்டர் சிவகுமாரன் அவர்களுக்குத்தான் வழங்கினோம். அந்த விருதினை அவருக்குக் கொடுக்க நாம் பட்டபாட்டினை என்றும் மறக்கமுடியாது.

'நாங்கள் அரசாங்கத்திடம் சம்பளம் பெற்றுத்தான் வேலை செய்கிறோம். எங்களுக்கு எதற்கு விருது?' என்று கூறி, அந்த விருதினை ஏற்றுக் கொள்ள முதலில் அவர் மறுத்துவிட்டார். எத்தனையோ நியாயங்களைச் சொல்லித்தான் அவரைச் சம்மதிக்க வைக்கவேண்டியிருந்தது.

அப்போதும் மேடைக்கு வரும்போது யாழ் வைத்தியசாலைப் பணிப்பாளராய் இருந்த டாக்டர் செல்வி கனகரட்ணம் அவர்களைத் தன்னுடன் அழைத்து வந்து, மேடையில் வைத்தே தான் பெற்ற விருதுப் பணத்தையும், விருதுக் கேடயத்தையும் அவரிடமே ஒப்படைத்துவிட்டார் அந்தப் பெரிய மனிதர்.

அவரது தந்தையார் யாழ் இந்துக் கல்லூரியின் அதிபராய் இருந்து ஓய்வு பெற்றவர். பேரறிஞர். ஆங்கிலத்திலும், தமி ழிலும் பெரும் புலமை பெற்றிருந்தவர். என். சபாரட்ணம் என்பது அவரது பெயர். ஓய்வு பெற்ற பின் சிலகாலம் ஈழநாடு பத்திரிகை யின் ஆசிரியப் பொறுப்பேற்று ஆழமான ஆசிரியத் தலையங்கங்கள் பலவற்றை எழுதி வந்தார். அவர் யதார்த்தமாக எழுதிய ஆசிரியத் தலையங்கம் ஒன்றை விரும்பாமல், புலிப் போராளிகள் கொடுத்த நெருக்கடியால் பின் எழுதுவதையே அவர் நிறுத்திக் கொண்டார். தனது இறுதிக்காலம்வரை அவர் பேனாவைத் தொடவே இல்லை.

அத்தகைய அவர், பிற்காலத்தில் தனது நோய்க்கான மருந்தைப் பெறவென, யாழ் வைத்தியசாலைக்குப் போகும் போது, தனது மைந்தரான டாக்டர் சிவகுமாரன் அவர்களது காரிலேயே செல்வாராம். வைத்தியசாலைக்குள் நுழைந்ததும் நோயாளிகள் அமரும், 'பெஞ்சில்' தந்தையாரை இருத்தி விட்டு, 'வரிசை முறைப்படி நீங்களும் வாருங்கள்' என்று கூறிவிட்டு டாக்டர் சிவகுமாரன் உள்ளே போய்விடுவாராம்.

அந்த அளவிற்கு நோயாளிகளைச் சம மாய்ப் பாவித்த பெரிய மனிதர் அவர். இவர் தவிர, வேறு எந்த டாக்டராய் இருந்தாலும், புகழ்பெற்ற அந்த அறிஞரை, எழும்பித் தேடி வந்து முதலில் பார்வையிட்டிருப்பார்கள். அந்த அளவிற்கு யாழ் முழுவதும் பெயர்பெற்றிருந்த அறிஞர் அவர். அத்தகைய ஒருவரைத் தந்தையென்றும் பார்க்காமல், வரிசையில் வரவைத்துப் பார்த்த நேர்மை மிக்கவராய் டாக்டர் சிவகுமாரன் திகழ்ந்தார்.

ஒருமுறை மருத்துவ உதவியாளர் ஒருவர், இருதய நோய் 'பேஷன்ற்' ஒருவரை மாடிக்கு நடத்தி அழைத்துச் செல்வதைக் கண்டு பதறி, அந்தப் 'பேஷன்றை' கைகளால் தூக்கிச் சென்று படுக்கையில் கிடத்தி வைத்தியசாலையையே அதிர வைத்தவர் இவர்.

உண்ணாவிரதம் இருந்த திலீபனை நாளாந்தம் பரிசோதித்து வந்தவர் இவர் தான். திலீபனின் உயிர் பிரிந்த அன்று அவரைப் பரிசோதிக்க வந்த டாக்டர் சிவ குமாரன், பரிசோதனை செய்தபின், திலீபன் உயிரிழந்துவிட்டதை அறிந்து கொண்டு, அவரது பாதங்களின் பக்கமாய் வந்து முழங்காலில் இருந்து விழுந்து கும்பிட, கூடி இருந்த மக்கள் எல்லாம் கதறி அழத்தொடங்கிய காட்சியை இன்றும் என் னால் மறக்கமுடியாது.

பின்னாளில் புலிகளுக்கும், அரசாங்கத்திற்கும் சமரசம் செய்து போர் நிறுத்தம் கொண்டுவரவும் அவர் முயன்றார். ஆனால் அவரது முயற்சிக்கு முதலில் பச்சைக் கொடி காட்டிய புலிகள், பின்னர் அவர் முயற்சியை ஏற்க மறுத்து அவரை அந்தரத்தில் விட, மிகவும் மனம் உடைந்து போனார் அவர். யாழ்ப்பாணம் தனது சேவைக்குச் சரியான மதிப்புத் தரவில்லை என்ற கவலை அவர் மனதில் கடைசி வரை இருந்தது. கொழும்புக்கு வந்த பிறகு பேரினத்தைச் சார்ந்த டாக்டர்களும், வைத்திய மாணவர்களும், நோயாளிகளும் அவரைக் கடவுளாகவே தொழுது நின்றதை நான் கண்ணால் கண்டேன்.

தான் பிறந்த யாழ்ப்பாணக் காரை நகர் மண்ணுக்குத் தந்தையும் மகனும் பெருமை சேர்த்தனர். கடைசி வரை இலட்சிய வாழ்வினை அவ்விருவரும் வாழ்ந்து முடித்தனர்.

நோயாளிகளை, மிருகங்களாய் நடத்தும் வைத்தியர்களைக் கண்டிருக்கிறேன். நோயாளிகளை, நோயாளிகளாய் மட்டும் நடத்தும் வைத்தியர்களையும் கண்டிருக்கிறேன். நோயாளிகளை, மனிதர்களாய்ப் பார்த்து நடத்தும் வைத்தியர்களையும் கண்டிருக்கிறேன். எனக்குத் தெரிந்து நோயாளிகளைத் தெய்வங்களாய்ப் போற்றி மதித்த ஒருவர் டாக்டர் எஸ். சிவகுமாரன் அவர்கள் மட்டும் தான். அவரது இழப்பு நமது இனத்திற்கான பேரிழப்பு என்பதில் எந்த ஐயத்திற்கும் இடமில்லை.

**சல்லடையாரின் சலிப்பு * மாமனிதனின் திருவடிகளுக்கு என் மலரஞ்சலி. ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!**

**2. உரலார் கேள்வி:-** இன்றைய திருமணங்களில் நடைபெறும் 'ஆடம்பரக் கூத்துக்கள்' பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**உலக்கையார் பதில்:-** இங்கு திருமணங்கள் கூட நடக்கின்றதா என்ன? அப்படி எங்கேனும் நடந்தால் சொல்லுங்கள். சென்று பார்க்க ஆசையாய் இருக்கிறது. இப்போது பெரும்பாலும் இங்கு நடப்பதெல்லாம் திருமணங்கள் அல்ல! சினிமா 'சூட்டிங்'தான். உணர்வு பூர்வமான, அன்பு நிறைந்த, உறவுகளைப் பேணும் திரும ணங்களைப் பார்த்துப் பல காலம் ஆகி விட்டது.

எனது சகோதரியின் திருமணத்தின் போது மாப்பிள்ளை தாலி கட்டுகையில், கையெடுத்துக் கும்பிட்டு எனது அக்கா விம்மி அழுத காட்சி இன்றும் எனது மனதில் நிற்கிறது. இப்போது நடக்கும் திருமணங்களில் எல்லாம் அத்தகைய உணர்வுபூர்வமான காட்சிகளைக் காண முடிவதில்லை. தாலி கட்டுகையில் மணப்பெண் தனது அட்டியலையோ, நெற்றிப் பொட்டினையோ, உதட்டுச்சாயத்தையோ, எந்தவித பதற்றமும் இல்லாமல் 'அஜஸ்ட்' பண்ணிக் கொள்வதைத்தான் இப்போதெல்லாம் பார்க்க முடிகிறது.

அதுபற்றி 'கல்யாணம் வைபோவமே?' என்ற எனது கட்டுரையில் விரிவாக எழுதியிருக்கிறேன். மணப்பெண்ணின் அலங்காரத்திற்கான செலவுத் தொகை எமது நாட்டின் விலைவாசி போல நாளுக்கு நாள் கடகடவென ஏறிக்கொண்டே போகிறது. ஒரு பணக்கார வீட்டுத் திருமணத்தில் மணப்பெண்ணின் அலங்காரத்திற்கான இன்றைய செலவில், ஐந்து ஏழைப் பெண்களுக்கான திருமணத்தையே நடத்தி விடலாம்.

மணப்பெண்ணிற்கான அலங்காரச் செலவு என்பது போய், இன்று கிழவிகள் உட்பட உறவுக் கூட்டம் அத்தனைக்குமான அலங்காரம் என அச்செலவு விரிந்திருக்கிறது. மற்றைய ஆடம்பரச் செலவுகளின் விபரமும் அப்படியேதான்.

ஒரு புதிய உறவைத் தொடங்குவதற்கான நெகிழ்ச்சியோ, சிலிர்ப்போ இன்றைய கல்யாணங்களில் துளியளவேனும் இல்லை. முழுக்க முழுக்க சினிமா 'சூட்டிங்' போலத்தான் திருமணத்தை நடத்துகிறார்கள்.

அதில் பாடல் காட்சிகள் இல்லை என்ற குறையையும் இன்று நீக்கத் தொடங்கி விட்டார்கள். மேடைக்கு வரும்போதே மணப்பெண் தோழிகளுடன் ஆடியபடி வரும் புதிய வழக்கம் ஒன்றும் தொடங்கியிருக்கிறது.

நம்மவரிடம் அந்த நோயும் இன்றைக்கு மெல்ல மெல்லப் பரவத் தொடங்கியிருக்கிறது. ஆடிக் கொண்டு மேடைக்கு வரும் மணப்பெண்ணை அசட்டு மாப்பிள்ளை, எழுத்தாளர் சுஜாதா சொல்வது போல, 'ஙே' என்று பார்த்துக் கொண்டு இருக்கிறான்.

அந்த ஆட்டத்திற்கும் ஒரு 'தேசிய கீதத்தை' அனைவருமாக இப்போது அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். 'மம்பட்டியான் மம்பட்டியான் - மலையூறு நாட்டாம மனசைக் காட்டு பூட்டாம உன்னைப் போல யாரும் இல்ல மாமா, தஞ்சாவூரு ராசாவ தாராளாமா தந்தாங்க மனசுக்குள்ள எவனும் இல்ல மாமா மம்பட்டியான் இந்த மம்பட்டியான்' என்று அற்ப ஆயுசில் மறைந்து போன ஒரு கொள்ளைக்காரன் பற்றிய பாட்டைப் பாடி, அதைத் திருமணத்தின் மங்களப் பாட்டாக்கி மகிழ்கிறார்கள்.

எங்கள் தமிழினத்தார்க்கு ஏதோ நடந்து விட்டது. அவர்களுக்குள் நல்லவற்றைப் புகுத்தப் படாதபாடு படவேண்டியிருக்கிறது. கெட்டவைகளை அவர்கள் வெற்றிலை வைத்து வரவேற்கிறார்கள். எப்படித்தான் உருப்படுவோமோ தெரியவில்லை.

**சல்லடையாரின் சலிப்பு * சீ போங்கோ! வாரிதியார் சொல்லிறதைக் கேட்க எனக்கே வெட்கமா இருக்குங்கோ!**

**3. உரலார் கேள்வி:-** இலங்கையின் தொல்பொருள் ஆராய்ச்சி நிறுவனம் எவரின் தலைமையின் கீழ் இயங்குகிறது என்று தெரியுமா?

**உலக்கையார் பதில்:-** அண்மையில் இந்த ஆராய்ச்சி நிறுவனத்தின் தேவைகளுக்கு பௌத்த தேரர்கள் பொருள் உதவி செய்து வந்ததாக அறிந்து, ஜனாதிபதி அவர்களே 'இதை எப்படிச் செய்யலாம்' எனக்கேட்டு அந் நிறுவனத் தலைவரைக் கண்டித்திருக்கிறார். இதற்கு மேலும் இந்த நிறுவனம் எவரின் தலைமையின் கீழ் இயங்குகிறது என்று சொல்லவும் வேண்டுமா?

**சல்லடையாரின் சலிப்பு * ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரே கண்ணா.**

**4. உரலார் கேள்வி:-** யாழில் புதிதாய் எழுந்து வரும்; பௌத்த விகாரைகளுக்கான தமிழ்க்கட்சிகளின் எதிர்ப்பினைக் கண்டித்து, இத்தகைய செயல்களால் தெற்கில் மதக்கலவரம் ஏற்படலாம் என்று பௌத்த பீடத்திலிருந்து எச்சரிக்கை வந்திருப்பது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**உலக்கையார் பதில்:-** தெற்கில் தமிழர்கள் புதிய கோயில்கள் அமைத்து வருகிறார்கள் என்பது உண்மையே. அதுபோல நாங்களும் ஏன் வடக்கில் பௌத்த விகாரைகளை அமைக்கக்கூடாது என்ற கேள்வியில் முற்றாக நியாயம் இல்லை என நாம் சொல்லமுடியாதுதான். ஆனால் ஒன்று, தெற்கில் அமைந்த இந்துக் கோயில்களை வைத்து எவரும் மதமாற்ற முயற்சியையோ, பிரதேச அபகரிப்பு முயற்சியையோ செய்ததில்லை. நாங்களும் அது போன்ற செயல்களைச் செய்யமாட்டோம் என்று அவர்கள் உறுதி கூறுவார்களானால் தாராளமாகக் கட்டிவிட்டுப் போகட்டும். தமிழர்கள் எதிர்ப்பது பௌத்த மதத்தையோ, பௌத்த ஆலயங்களையோ அல்ல. அவற்றைத் தம் தளமாகக் கொண்டு தமிழர் பிரதேசத்தை பேரினத்தார் அபகரிக்க நினைபப்பதையே அவர்கள் எதிர்க்கிறார்கள்.

**சல்லடையாரின் சலிப்பு * அனைத்தையும் துறக்கச் சொன்னார்; அவர். அனைத்தையும் பிடிக்கச் சொல்கிறார்கள் இவர்கள். அது தான் வித்தியாசம்.**

**5. உரலார் கேள்வி:-** மே 18 உங்கள் பதிவு?

**உலக்கையார் பதில் -** ஈழத் தமிழர்களின் இருள்நாள்.

உரிமை கோரி நின்ற மக்களின் உணர்வுகள் சிதைந்த நாள்.

ஈழத் தமிழர்கள் மந்தைகளாய் ஆக்கப்பட்ட இழிநாள்.

உலக நாடுகள் தம் மனச்சாட்சிக்குக் கல்லறை கட்டிய நாள்.

இலங்கையின் பாவக்கணக்கு விண்ணைத் தொட்டநாள்.

புத்தபிரானின் போதனைகள் பயனற்றுப் போன நாள்.

போராளிகளை அழிப்பதாய்ச் சொல்லி அப்பாவிகளையும் கொன்று குவித்த நாள்.

இப்படி எத்தனையோ சொல்லலாம். சொல்லி என்ன ஆகப்போகிறது?

**சல்லடையாரின் சலிப்பு * மானுடம் மடிந்த நாள்.**

## பெண்ணின் தங்க நகையை கொள்ளையிட முயன்ற பொலிஸ் கான்ஸ்டபிள் கைதானார்

பெண்ணின் தங்க நகையை கொள்ளையிட முயன்ற பொலிஸ் கான்ஸ்டபிள் கைதானார்!

மடவல பிரதேசத்தில் இரவு நேரத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண் ஒருவரை மோட்டார் சைக்கிளில் பின்தொடர்ந்து சென்று, அந்த பெண் அணிந்திருந்த நகையை கொள்ளையிட முயற்சித்த பொலிஸ் கான்ஸ்டபிள் சாரதி ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டார் எனப் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

களுத்துறை வடக்கு பொலிஸ் அதிகாரிகள் குழுவினர், பதுரலிய பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் சாரதியையே சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.



இந்நிலையில், சந்தேக நபர் பயணித்த மோட்டார் சைக்கிளும் பொலிஸ் காவலில் எடுக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபரான பொலிஸ் கான்ஸ்டபிள் வஸ்கடுவ பொலிஸ் பிரிவில் வசிப்பவர். அத்தோடு, சந்தேக நபரின் தந்தையும் ஓய்வுபெற்ற பொலிஸ் சார்ஜன்ட் ஆவார். (5)

## கனடா பூநகரி ஒன்றியத்தின் ஏற்பாட்டில் விக்னேஸ்வராவுக்கு பல்நோக்கு மண்டபம்

கனடா பூநகரி ஒன்றியம்தைச் சேர்ந்த செல்வக்குமாரின் நிதி அனுசரணையில் பூநகரி விக்னேஸ்வரா வித்தியாலயத்துக்கு பொதுநோக்கு மண்டபம் அமைக்கப்பட்டு கடந்த வாரம் மாணவர்களின் பாவனைக்காகத் திறந்துவைக்கப்பட்டது.

பாடசாலை முதல்வர் லயன் ஜி.லெனின்குமார் தலைமையில் நடைபெற்ற மேற்படி திறப்பு விழாவில் கிளிநொச்சி தெற்கு கல்வி வலயவிசேடகல்விஉதவிக் கல்விப்பணிப்பாளர் இ.ஜெயசேகரம் பிரதம விருந்தினராகவும் சிறப்பு விருந்தினர்களாக அனுசரணையாளர் செல்வரட்ணத்தின் குடும்ப உறுப்பினர்களும் கலந்து சிறப்பித்தனர்.

11 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட மண்டபத்திறப்பு விழாவில் விருந்தினர்கள் மாலை அணிவித்துவரவேற்கப்பட்டு மங்கள விளக்கேற்றும் நிகழ்வு ஆரம்பமாகியயது. முதலில்

செல்வரத்தினம்தம்பதிகளின் புதல்வன் அமரர் செ.உதயன்ஞாபகார்த்தமாக அவரதுஅண்ணரானகனடா

வாழ்செ.செல்வக்குமார் நிதிப்பங்களிப்பால்அமையப் பெற்றமண்டபம்திரைநீக்கம்

செய்யப்பட்டு நாடா வெட்டித் திறந்து வைக்கப் பட்டது.

இதில் மாணவர்களின் நடனம், பாடல், கவிதை என கலைநிகழ்வுகளும்



நடைபெற்றன. இறுதியில் விருந்தினர்கள் பொன்னாடை அணிவித்து கௌரவிக்கப்படனர். (05)



# மலையகம் 200 நிகழ்வு நுவரெலியாவில் ஆரம்பம்!

மலையகம் 200 வரலாற்றை சிறப்பிக்கும்வகையில்கண்டிசமூக அபிவிருத்தி நிறுவகம்,மலையகத் தமிழர் மரபு ஆகியவை நுவரெலியாவில் ஒழுங்கு செய்திருந்த மூன்று நாள் நிகழ்வின் ஆரம்ப நிகழ்வு நேற்று (வெள்ளிக்கிழமை) ஆரம்பமானது.



கண்டி சமூக அபிவிருத்தி நிறுவக நிறைவேற்று பணிப்பாளர் பி.முத்துலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்த ஆரம்ப நிகழ்வில் மலையக அரசியல் பிரமுகர்களான நாடாளுமன்ற உறுப்பினர்களானமனோகணேசன், திகாம்பரம், இராதாகிருஷ்ணன், வடிவேல் சுரேஷ், அரவிந்தகுமார், வேலுகுமார், சமூக அமைப்புகள், பெருந்தோட்ட முதலாளிமார்



சம்மேளன உறுப்பினர்கள், வெளிநாட்டுப் பிரமுகர்கள், பெருந்தோட்ட தொழிலாளர்கள் உள்படநாட்டில் பல பாகங்களிலும் இருந்து அதிகளவானர்கள் கலந்து கொண்டனர்.

நுவரெலியாவில் ஆரம்பமாகியுள்ள மலையகம் 200 நிகழ்வு 19,20,21 ஆகிய தினங்களில் தொடர்ச்சியாக காலை 09 மணி முதல் மாலை 05 மணிவரை இடம்பெறவுள்ளது.

இந்திய வம்சாவளிகளாக இலங்கையில் பெருந்தோட்ட தொழிலாளர்களாக1823ஆம்ஆண்டு முதல்இப்போது2023ஆம்ஆண்டு வரை 200 வருடகால வரலாற்றை கொண்டுவாழும்மலையகமக்களை நினைவு கூர்ந்து கண்டி சமூக அபிவிருத்தி நிறுவகம் நுவரெலியாவில் நிகழ்வுகளை நடத்தஏற்பாடுகள் செய்துள்ளன.



நுவரெலியா சினிசிட்டா உள் அரங்கு மற்றும் வெளியரங்கில் பல விசேட நிகழ்வுகளை நடத்த நிறுவகம் ஏற்பாடுகள் செய்துள்ளது.

இந்த விசேட நிகழ்வுகளில் மலையக மக்களின் வாழ்வியல், வரலாறு, அரசியல், பொருளாதாரம், தொழில்மற்றும்உரிமைகள்போன்ற விடயங்களை வெளிக்காட்டும் வகையில் ஆய்வரங்கு, தோட்டத் தொழிலாளர்களின் அருங்காட்சிய கண்காட்சி போன்ற நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

அத்துடன்வீட்டுஉரிமை,காணி உரிமை, தபால் சேவை, அனர்த்த முகாமைத்துவ நிறுவனத்தின் சேவைகள் உட்பட பிரதேச செயலகம்மற்றும்பிரதேசசபைகள் அதிகரிப்பு போன்ற விடயங்கள் தொடர்பில் கோரிக்கைகளை வலியுறுத்தி கையொப்பம் திரட்டல் மற்றும் மகஜர் சமர்ப்பித்தல் நிகழ்வும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)



# பிரித்தானிய அமைப்புகளால் ஐக்கிய இராச்சியத்தில் முள்ளிவாய்க்கால் நினைவு பேரணி மே 18 நடந்தது!

உலகளாவிய ரீதியில் வியாழக்கிழமை மே 18 முள்ளிவாய்க்கால்நினைவேந்தல் இறுதி நாள் நிகழ்வுகள் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

அந்த வகையில் பிரித்தானியாவின்தமிழர்ஒருங்கிணைப்புக்குழு மற்றும்தமிழ்இளையோர் அமைப்புஎன்பனஒன்றிணைந்து ஐக்கிய இராச்சியம் ஊடாக இலங்கை அரசுக்கு அழுத்தம் வழங்கும் முகமாக ஐக்கிய இராச்சியத்தில்முள்ளிவாய்க்கால் நினைவு பேரணி உணர்வு பூர்வமாக இடம்பெற்றதுடன், குறித்த பேரணியில் பல நூற்றுக்கணக்கான தமிழர்கள் கலந்துகொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (05)




# ஜனாதிபதியுடனான பேச்சுகள் திருப்திகரமானவையாக இல்லை

## தவராசா கலையரசன் அதிருப்தி

ஜனாதிபதியுடனானபேச்சுகள் திருப்திகரமானவையாக அமையவில்லைஎனநாடாளுமன்ற உறுப்பினர்தவராசாகலையரசன் குறிப்பிட்டார்.

மட்டக்களப்பு அம்பாறை இலங்கைத் தமிழரசுக்கட்சி கிளை ஏற்பாடு செய்த வலிசுமந்த முள்ளிவாய்க்கால்மே18நிகழ்வின் 14ஆவதுநிறைவைஅனுஷ்டிக்கும் முகமாக நாவிதன்வெளி 15 ஆம் கிராமம் ஸ்ரீமுருகன் ஆலயத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் கலந்துகொண்டுமேற்கண்டவாறு குறிப்பிட்டார்.



அங்குகருத்துதெரிவித்தஅவர்-

அரசாங்கம் கையாள்கின்ற ஒவ்வொரு விடயங்களையும் பொதுமக்களாகிய நீங்கள் அவதானிக்க வேண்டும். 1983 ஆம் ஆண்டு எமது இனம் நாடு பூராகவும் அழிக்கப்பட்ட பின்னர் 2009 ஆம் ஆண்டு மீண்டும் மிக மோசமாக அழிக்கப்பட்டது.

இவ்வாறான விடயங்களை எமது இளையசந்ததியினர் அறிந்து கொள்ளவேண்டும்என்பதற்காகவும் எதிர்காலத்தில் எமது இனம் எதிர்காலத்தில் வாழ வேண்டும் என்பதற்காகவும் இவ்வாறான நிகழ்வுகளைநடத்துகின்றோம்.இந்த நாட்டின்தலைவர்கள்எந்தவிதஇதய சுத்தியுமின்றி எம்மை எவ்வாறு அழிக்க வேண்டும் என்பதை எண்ணிக்கொண்டிருக்கின்றனர் எனத்தெரிவிக்கவிரும்புகின்றேன்.

- என்றார்.

குறித்த நிகழ்வின் போது நாவிதன்வெளி 15 ஆம் கிராமம் ஸ்ரீ முருகன் ஆலயத்தில் கூட்டு வழிபாடு இடம்பெற்றது. பின்னர் பூசையைத் தொடர்ந்து நினைவுச்சுடர் மாவீரர் குடும்பம் சார்பாக இரு தாய்மார் ஏற்றினர். அத்துடன் ஒரு நிமிடம் மௌன அஞ்சலியுடன் ஏனையோர் சுடர் ஏற்றினர்.

மேலும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்னாள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் தமிழரசுக்கட்சி ஆதரவாளர்கள் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர். (05)

# ஆளுநர்களை மக்கள் நியமிக்கும் காலம் உதயமாகுதல் வேண்டும்!

## அருட்தந்தை மா. சத்திவேல் கருத்து

ஆளுநர்களை மக்கள் நியமிக்கும் காலம் உதயமாக வேண்டும் என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமானஅருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

அவரால் நேற்று (வெள்ளிக்கிழமை) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவைவருமாறு-

வடக்கு ,கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களுக்குஜனாதிபதியால் புதிய ஆளுநர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். வடக்கிற்கும்,கிழக்கிற்கும்இரண்டு தமிழர்கள் நியமிக்கப்பட்டுள்ளதோடு ஊவா மாகணத்தின்முன்னாள் அமைச்சர் கிழக்கு மாகாணத்தின் ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார். வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு தமிழர்கள் நியமிக்கப்பட்டனர்எனப்பெருமை கொள்வோரும்உண்டு. இதில் பெருமைப்படுவதற்குஒன்றுமில்லை. ஆளுநர்கள் ஜனாதிபதியின் தேவையை நிறைவேற்றுபவர்களைத் தவிர மக்கள் கோரிக்கைகளைசெவிமடுப்பவர்களாகவே இருப்பார்கள். செந்தில் தொண்டமான்ஊவாமாகாணசபையின்அனுபவம்உள்ளவர். அவரை ஊவா மாகாணத்துக்கு ஆளுநராக நியமிக்காதமை ஏன்? வேறொரு தமிழரை கிழக்கு மாகாணத்துக்குநியமிக்காததன் நோக்கம் என்ன? அதுவே ஜனாதிபதியின் நரி தந்திரம்.

தமிழர்கள் அதிகமாகவாழும்மத்தியமற்றும் ஊவா மாகாணங்களுக்குஇதுநாள்வரை தமிழர்களை எவரும் ஆளுநர்களாகவோ முதலமைச்சர்களாகவோ நியமிக்கப்படவில்லை. அந்த அளவு துணிவு கட்சிகளுக்கும்கிடையாது.மலையக மக்களின் வாக்குகள் வேண்டும். ஆனால்தமிழர்களைஅதிகாரத்தில் வைத்து விடக்கூடாது. இவ்வாறு நியமித்தால்மலையகபிரதேசத்தை மலையக தமிழர்களின் தேசியத்தின்அடையாளமாகஅடையாளப் படுத்தி விடுவார்கள் என்று பயம். இது சிங்கள பௌத்த ஆதிக்கத்தின்வெளிப்பாடுஎன்றும் கூறலாம்.

ஏற்கனவே அமைச்சர் பதவி ஒன்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்கு தொண்டமான் குடும்பத்தவருக்கு கொடுக்கப்பட்ட நிலையில் அதே கட்சியை சேர்ந்த அதே தொண்டமான் குடும்பத்தைச் சார்ந்த இன்னொருவர் ஆளுநராக நியமிக்கப்பட்டு இருக்கின்றார். தற்போது அவர்களின் கட்சி முழுமையாக ஜனாதிபதியினதும் ஐக்கிய தேசிய கட்சியினதும் கைக்குள் சென்று விட்டது என்று கூறலாம். இதுவரை காலமும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின்அரவணைப்பிற்குள் வளர்ந்தவர்கள்தற்போதுரணிலின் அரவணைப்புக்குள் சென்று விட்டனர். இது அடுத்த தேர்தலை இலக்கு வைத்து மலையகத்தை தமதாக்கும் செயற்பாடாகும்.

செந்தில் தொண்டமானின் நியமனத்தின் மூலம் தற்போது ஜனாதிபதி இந்தியாவையும் சமாளித்து விட்டார். புதிய ஆளுநராகபதவிஏற்றுள்ளசெந்தில் இந்தியா விரும்பும், இந்துத்துவா சிந்தனையாளர்கள் விரும்பும், தமிழகத்தோடுநெருங்கியஒருவரும் ஆவார்.இனிமேல்இந்தியதுணைத் தூதரகம் கிழக்கில் அமைந்தது போன்றது தான்.

வடக்கு கிழக்கை சிங்கள பௌத்ததொல்லியல்திணைக்களம் வேகமாகஆக்கிரமிக்கும்காலமிது. புதிய ஆளுநர்கள் அதற்கு என்ன செய்யப் போகின்றார்கள். ஆளுநர்களைமக்கள்நியமிக்கும் காலம்உதயமாகவேண்டும். (05)






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.05.2023இல் வெளியிடப்பெற்றது.

இத்துடன் நேற்றைய மாலைப்பதிப்பின் பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

பக்கங்கள்: 04

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 04 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 05 வெள்ளிக்கிழமை 19.05.2023 கதிர் 62

## ஊழல் வழக்கில் இருந்து ஜோன்ஸ்டன் விடுதலை



அரசுக்கு சொந்தமான லங்கா சதொச நிறுவனத்தில் இடம்பெற்ற ஊழல் தொடர்பான வழக்கில் இருந்து முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ விடுவிக்கப்பட்டுள்ளார்.

2011ஆம் ஆண்டு காலப்பகுதியில் கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சராக இருந்தபோது ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ சட்டவிரோதமான

2

# வடக்கு ஆளுநரின் அரச இல்லத்தில் மந்திரித்த பொருட்களால் பரபரப்பு

## வெட்டிப் புதைக்கச் சொன்னார் ஜீவன் தியாகராஜா மதகுருவை அழைத்து அகற்றினர் அதிகாரிகள்



யாழ்ப்பாணத்தில் உள்ள வடக்கு மாகாண ஆளுநருக்கான அரச இல்லத்தில் இருந்து மந்திரிக்கப்பட்ட பொருட்கள் இந்து மத குரு ஒருவரின் உதவியுடன் மீட்கப்பட்டு உரிய முறையில் அழிக்கப்பட்டதாக ஆளுநர் செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வடமாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள பி.எம்.எஸ். சாள்ஸ் அடுத்தவாரம் பதவியேற்க உள்ள நிலையில் ஆளுநருக்கான அரசஇல்லத்தைத்தூய்மையாக்கும் பணி முன்னெடுக்கப்பட்டது.

முன்னாள் ஆளுநர் ஜீவன் தியாகராஜா இதுவரை பணியாற்றிவந்த ஆளுநருக்கான அரச இல்லத்தைப் பணியாளர்கள் துப்புரவு செய்ய முயன்றபோது அங்கு போத்தல்களில் அடைக்கப்பட்ட நிலையில் மந்திரிக்கப்பட்ட பொருட்கள் காணப்பட்டதை அவதானித்தனர். இதனால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது. உடனடியாக உயர் அதிகாரிகளுக்குத் தகவல் வழங்கினர்.

அதிகாரிகள் முன்னாள் ஆளுநரைத் தொடர்புகொண்டு அது பற்றிக் கேட்டபோது, அவை மந்திரிக்கப்பட்ட பொருட்கள் என்றும் அவற்றை எடுத்து எங்காவது நிலத்தில் புதைத்து விடுமாறு அவர் கூறினார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதையடுத்து இந்து மத குரு ஒருவரைத் தொடர்பு கொண்ட அதிகாரிகள் அவர் மூலமாக அந்தப் பொருட்களை ஆளுநர் இல்லத்திலிருந்து அகற்றினர்.

மந்திரிக்கப்பட்ட அந்தப் பொருட்கள் அனைத்தும் தனியான ஓரிடத்தில் முறைப்படி கிடங்கு வெட்டிப் புதைக்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

## இலங்கை மக்களின் உரிமைக்காகக் குரல் எழுப்புவதை கனடா நிறுத்தாது!

### அந்நாட்டுப் பிரதமர் ட்ரூடோ தெரிவிப்பு



இலங்கையில் தொடர்ந்து கஷ்டங்களை எதிர்நோக்கும் அனைவரது உரிமைகளுக் காகவும் குரல்கொடுப்பதைக் கனடா நிறுத்தாது என்று அந்த நாட்டின் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்தார்.

முள்ளிவாய்க்கால் படுகொலையின் 14ஆம் ஆண்டு நினைவேந்தலையொட்டி அவர் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கையில் 14 ஆண்டுகளுக்கு முன்னர் முடிவடைந்த ஆயுதப் போரின் போது ஏற்பட்ட துயரமான உயிர் இழப்புகளை நாங்கள் சிந்திக்கின்றோம்.

முள்ளிவாய்க்கால் படு கொலை உட்பட பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் தங்கள் உயிர்களை இழந் தார்கள்.

மேலும் பலர் காணாமல்போனார்கள், காயமடைந்தார்கள் அல்லது இடம்பெயர்ந்தார்கள்.

நமது எண்ணங்கள் பாதிக்கப்பட்டவர்கள், உயிர் பிழைத்தவர்கள் மற்றும் அவர்களின் அன்புக்குரியவர்கள், இந்த அர்த்தமற்ற

2

## கிழக்கின் புதிய ஆளுநர் இன்று கடமைகளைத் தொடங்கினார்



(வி.ரி.சகாதேவராஜா)

கிழக்கு மாகாணத்தின் முதல் தமிழ் ஆளுநரான செந்தில் தொண்டமான் இன்று காலை சமய வழிபாடுகளுடன் தனது கடமைகளைச்சம்பிரதாயபூர்வமாகத் தொடங்கினார்.

கிழக்கு மாகாண தலைமைச் செயலாளர் மற்றும் செயலாளர்கள் உயரதிகாரிகள் அரசியல் பிரமுகர்கள் என ஆயிரக்கணக்கான மக்கள் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

புதிய ஆளுநருக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது. பின்னர் ஆளுநர் பணிமனை யில் சிங்களத்தில் தேசிய கீதம் இசைக்கப்பட்டது. ஆளுநர் பதிவேட்டில் ஒப்பமிட்டதும் பலரும் அவருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர். அரசியல் பேதமின்றி அதிகளவில் பொன்னாடைகள் போர்த்தப்பட்டன.

திருகோணமலையில் அமைந்துள்ள கிழக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், நாடாளுமன்ற உறுப்பினர்கள், கிழக்கு மாகாண பிரதம செயலாளர், திருகோணமலை மாவட்டச் செயலர் உட்படப் பலரும் கலந்துகொண்டனர். (02)

## பொலிஸ் சர்ஜெனட் பணி இடைநீக்கம்

### நிலாவெளியில் சம்பவம்

(எப்.முபாரக்)

திருகோணமலை நிலாவெளி பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்ற மாதாந்த பரிசோதனையின் போது புல்மோட்டை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் (புறீஷீ) சந்தன பஸ்நாயக்கவுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்ட காரணத்தால் சார்ஜன்ட் வியாழக்கிழமை பணி இடைநீக்கம் செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் குறித்து தெரியவருவதாவது:-

மேமாதத்திற்கான மாதாந்த ஆய்வு நடத்தப்பட்டபோது காயமடைந்தவர்கள் மற்றும் நோய்வாய்ப்பட்ட அலுவலர்கள் தனி வரிசையில் நிறுத்தப்பட்டுள்ளனர்.

நோய்வாய்ப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் நிற்கும் வரிசையில் குறிப்பிட்ட பொலிஸ் சார்ஜண்ட் நின்றுள்ளார்.

அந்த வரிசையில் நிற்பதற்கு குறிப்பிட்ட சார்ஜண்ட் அனுமதி பெற்றிருக்கவில்லை. அவரது காலணிகள் மற்றும் பெல்ட் போன்றவையும் பொலிஷ் செய்யப்படவில்லை என்றும் ஏ.எஸ்.பி சந்தன பஸ்நாயக்க கூறியுள்ளார்.

இதனால் கோபமடைந்த சார்ஜண்ட் ஏ.எஸ்.பியை நோக்கி இது ஒரு தவறா? எங்களுக்குள்ள பிரச்னைகள் எங்களுக்கு மட்டும்தான் தெரியும் என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள், என்னை சஸ்பெண்ட் செய்யுங்கள். நான் பயப்படவில்லை. என உரத்த குரலில் சத்தமிட்டுள்ளார்.

இதனையடுத்து சார்ஜண்டின் நடத்தை குறித்து உதவி கண்காணிப்பாளர் செய்த முறைப்பாட்டின் பேரில் திருகோணமலை எஸ்.எஸ்.பியினால் குறித்த பொலிஸ் சார்ஜன்ட் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

## சர்வதேச நீதிமன்றத்தில் இலங்கையை பாரப்படுத்துக தமிழீழம் தொடர்பில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்துக

### புதிய தீர்மானத்தை சமர்ப்பித்தனர் அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள்

தமிழீழம் குறித்து சர்வஜனவாக்கெடுப்பை நடத்தவேண்டும் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்த வேண்டும் எனக் கோரும் தீர்மானமொன்றை அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் பிரதிநிதிகள் சபையில் சமர்ப்பித்துள்ளனர்.

அமெரிக்க காங்கிரஸின் உறுப்பினர்களான டெபரா ரொஸ், பில் ஜோன்சன் இருவரும் இணைந்து ஈழத் தமிழர்கள்

2

## ஆளுநருக்கு எதிராக 6 பேர் போராட்டம்



வடக்கு மாகாண ஆளு நராக பி.எம்.எஸ். சாள்ஸ் நியமிக்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகமாக லஞ்ச ஊழலுக்கு எதிரான அமைப்பினர் எனும் பெயரில் ஆளுநர் அலுவலகம் முன்பாக இன்று காலை ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. வடக்கு ஆளுநர் இன்று கடமைகளைப் பொறுப்பேற்பார் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் இந்தப் போராட்டம் இடம்பெற்றது. ஆனால் ஆளுநர் கடமையைத் தொடங்கவில்லை.

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தின் முன்பாக வீதியில் காலை 10 மணியளவில் பதாகைகளுடன் கூடிய 6 பேர் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். சிவசேனை, ஐக்கிய மக்கள் சக்தியை சேர்ந்தவர்களும் அவர்களில் அடங்கியிருந்தனர்.

அவர்கள் பிடித்திருந்த பதாகைகளில் ஆளுநர்

2

## சர்ச்சைக்குரிய போதகர்களுடன் தனக்குத் தொடர்பு இல்லையாம்

### மஹிந்த சொல்கின்றார்

ஜெரோம் பெர்னாண்டோ மற்றும் உபேர்ட் ஏஞ்சல் ஆகிய போதகர்களை ஒருமுறைதான் சந்தித்துள்ளேன். அவர்களுடன் எனக்கு எவ்வித தொடர்பும் இல்லை.

இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

குறித்த போதகர்களுடன் மஹிந்த ராஜபக்சவுக்குத் தொடர்பு இருப்பதாக எழுந்த குற்றச்சாட்டுக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜெரோம் பெர்னாண்டோவின் காரியாலயத்தால் கோரிக்கை விடுக்கப்பட்டதன் காரணமாகவே அவர்களை நான் ஒருமுறை சந்தித்தேன்.



பௌத்தம் மற்றும் ஏனைய மதங்கள் தொடர்பில் ஜெரோம் பெர்னாண்டோ வெளியிட்ட சர்ச்சைக்குரிய கருத்துகளை நான் கண்டிக்கின்றேன்.

இனங்களுக்கிடையில் முரண்பாடுகளை அல்லது வெறுப்பை ஏற்படுத்தும் இவ்வாறான கருத்துக்களுக்கு எமது நாட்டில் இடமில்லை.

உத்தியோகபூர்வ சந்திப்பு என்பதால் புகைப்படங்கள் ஊடகங்கள் வெளியிடப்பட்டன. அதைத் தவிர அவர்களுடன் எனக்குத் தனிப்பட்ட உறவு இல்லை. - என்றார். (02)

# பிரித்தானியாவில் பெருமளவானோர் திரண்ட முள்ளிவாய்க்கால் நினைவு!









இறுதி யுத்தத்தில் உயிர்நீத்த உறவுகளை நினைவு கூரும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் தாயகம் உட்பட பல்வேறு புலம்பெயர் நாடுகளிலும் முன்னெடுக்கப்பட்டன.

அந்த வகையில், உலகத்தமிழர் வரலாற்று மைய 'முள்ளிவாய்க்கால் நினைவிடத்தில் 'பெருமளவானோர் மனமுருகி வணக்கம் செலுத்தியுள்ளனர்.

இருபத்தோரம் நூற்றாண்டில் உலகமே பார்திருக்க ஓர் இனம் இனப்படுகொலை செய்யப்பட்டு, அடக்குமு–றைக்கு உள்ளான அடையாளங்கள் அனைத்தும் சர்வதேசத்தால் தடைசெய்யப்பட்ட ஆயுதங்களை பயன்படுத்தி வல்லாதிக்க சக்திகளின் கொடும் கரம் கொண்டு வஞ்சகம் தீர்க்கப்பட்டு 14 ஆண்டுகள் கடந்தும், எம்மின உறவுகளின் உள்ளங்களில் என்றும் துயர்நிறைந்த அந்த கொடூர நாள்களின் வடுக்கள் என்றும் நெருப்பாக பற்றி எரிந்துகொண்டே இருக்கிறது. அது, ஓர் நாள் அவர்களின் இழப்பிற்கெல்லாம் நிச்சயமாக விடிவைப்பெற்றுத்தரும்.

முள்ளிவாய்க்காலின் இறுதி நாள்களில் கொத்துக்கொத்தாக தமிழ் மக்கள் இனப்படுகொலை செய்யப்பட்ட நினைவு நாள் வழமை போல் இந்த ஆண்டும் உலகத்தமிழர் வரலாற்று மைய வளாகத்தில் அமைந்துள்ள முள்ளிவாயக்கால் நினைவு முற்றத்தில் பெருமளவான பொதுமக்கள் கலந்துகொள்ள உணர்வெழிச்சியுடன் கடைப்பிடிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வின் ஆரம்பத்தில் பொது ஈகைச்சுடரினை அற்புதவிநாயகர் ஆலய பூசகரான குருக்கள் பிரம்மச்சிறிசதீஸ்வர சர்மா அவர்களும், நாடு கடந்த அரசாங்க பிரதிநிதி சாமினி இராமநாதன் அவர்களும் , இளையோர்களான செல்வன் சோதிதாஸ் மதி மற்றும் பேரின்பநாதன் சஞ்சிகா ஆகியோரும், முள்ளிவாய்க்கால் இறுதிச்சமரில் வீரச்சாவடைந்த பிரிகேடியர் ஜெயத்தின் மகன் செல்வன் ஆரகனும் ஏற்றிவைத்தனர்.

இதனை தொடர்ந்து பிரித்தானியா கொடியை உலகத்தமிழர் வரலாற்று மையத்தின் ஆலோசகர் பாலகிருஸ்ணன் (பாலா மாஸ்ரர்) ஏற்றிவைத்தார்.

ஆயிரம் ஆயிரம் மாவீரர்களின் செங்குருதியால் தமிழர்களின் அடையாளமாக பட்டொளி வீசிப்பறந்த தமிழீழ தேசியக்கொடியை முன்னாள் போராளி கபில் ஏற்றிவைத்தார். இந்நிகழ்வின்தொடர்ச்சியாக, அகவணக்கம் செலுத்த, முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை என அடையாளப்படுத்தப்பட்ட பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் இனப்படுகொலை செய்யப்பட்டமை நினைவாக ஏற்றிவைக்கப்படும் 'இனப்படுகொலையின் பிரதானச்சுடரை' இன அழிப்பினை அடையாளப்படுத்தும் இசை ஒலிக்க, பிரிகேடியர் ஆதவனின் துணைவியார் சுதா ஏற்றிவைத்தார்.

மேலும் இந்த நிகழ்வில் கலந்துகொண்ட அனைவரும் தமது உறவுகளை நினைவில் நிறுத்தி ஒழுங்குபடுத்தப்பட்ட சுடர்களை மனமுருகி கண்களில் கண்ணீர் சொரிய ஏற்றி வைத்து ஆத்மார்த்தமாக வணக்கம் செலுத்தியுள்ளனர்.

மேலும் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள நினைவுத்தூபிக்கு சுடர் ஏற்றி மலர் வணக்கம் செய்து ஆரம்பித்து வைக்க, நிகழ்வில் கலந்துகொண்ட அனைவரும் சுடர்களை ஏற்றி, மலர் வணக்கம் செலுத்தியதை தொடர்ந்து முள்ளிவாயக்காலில் இனப்படுகொலை செய்யப்பட்டவர்களின் ஆத்ம சாந்திக்கான இறையாசி வேண்டிய உரையை ஒக்ஸ்பேட் அற்புத விநாயகர் ஆலய குருக்கள் பிரம்மசிறி சதீஸ்வரசர்மா நிகழ்த்தினார்.

மேலும், வளாகத்தில் அமைந்துள்ள ஆலயங்களில் ஆத்மசாந்தி பூசைவழிபாடுகளும் நடைபெற்றன. மேற்படி அனைத்து நிகழ்வுகளையும், தமிழர் கலைபண்பாட்டு நடுவகமும், தமிழீழ மாவீரர் பணிமனையும் இணைந்து 'வீழ்ந்தது அவமானமல்ல, வீழ்ந்து கிடப்பதே அவமானம், மீண்டெழ முயற்சிப்போம்' என சிறப்பாக ஒழுங்கு செய்துள்ளனர். (5)

# பிரதமர் அலுவலகத்துக்குத் தவறான தகவல் வழங்கல்: வவுனியா பிரதேச செயலாளருக்கு எதிராக முறைப்பாடு!

பிரதமர்செயலகத்துக்குதவறானதகவல்வழங்கப்பட்டுள்ளதால் தனது நடமாடும் சுதந்திரம் உட்பட தனது உரிமை மீறப்பட்டுள்ளதாகத் தெரிவித்து சமூக செயற்பாட்டாளர் ஒருவர் வவுனியா பிரதேச செயலாளருக்கு எதிராக மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடொன்றைப் பதிவு செய்துள்ளார்.

வவுனியா ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத்திட்டத்தில் காணியற்ற அரச ஊழியர்களுக்கு காணி வழங்குவதற்காக தெரிவு செய்யப்பட்டவர்களில் பலர் அதற்கு தகுதியற்றவர்கள் எனத் தெரிவித்து பிரதேச செயலாளருக்கு தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் ஜனாதிபதி, பிரதமர் உட்பட உயர் அதிகாரிகளுக்கு கடிதம் மூலம் சமூக செயற்பாட்டாளர் ஒருவர் தெரியப்படுத்தியிருந்தார். இதன் பிரகாரம் பிரதமரின் செயலாளர் குறித்த முறைப்பாட்டாளருக்கு 14 நாள்களுக்குள் விளக்கம் கொடுக்குமாறு தெரிவித்ததுடன், பிரதமர் செயலகத்துக்கும் அறிவிக்குமாறும் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் வவுனியா பிரதேச செயலகத்தால் பிரதமருக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் குறித்த முறைப்பாட்டாளர் பொலிஸ் உத்தியோகத்தர் எனத் தெரிவித்துள்ளதுடன், அவரது குடும்பத்தினர் மற்றும் சகோதரர் தொடர்பிலும் குறிப்பிட்டு கடிதம் அனுப்பியுள்ளார்.

எனினும் முறைப்பாட்டாளர் தனியார் துறையில் பணியாற்றி வரும் நிலையில் தன்னை பொலிஸ் உத்தியோகத்தர் எனத் தெரிவித்துள்ளமையானது தனது தொழிலுக்கு ஆபத்தானது எனவும் அது தனது தொழில் அந்தஸ்துக்கு பாதிப்பை ஏற்படுத்துவதாக அமையும் எனத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தனக்கு உரிமை மீறப்படுவதற்கு பிரதேச செயலாளர் மற்றும் உதவி பிரதேச செயலாளர் காரணமாகியுள்ளனர் எனவும் தெரிவித்து மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்நிலையில் குறித்த முறைப்பாட்டாளர் சட்ட நடவடிக்கை எடுக்கவும் முனைந்துள்ளார் எனவும் தெரிவித்துள்ளார். (5)

## ஊழல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முறையில் சதொச ஊழியர்களை தேர்தல் பணிகளில் ஈடுபடுத்தினார் என்று இலஞ்ச ஊழல் ஆணைக்குழு குற்றம் சுமத்தியுள்ளது.

குறித்த வழக்கு இன்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட போதே கொழும்பு மேல் நீதிமன்றம் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவை விடுவித்து தீர்ப்பளித்துள்ளது. (04)

## ஆளுநருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கு முன்னர் அரச அதிகாரியாக இருந்தபோது அவர் மீது சுமத்தப்பட்டதாகக் கூறப்படும் ஊழல் குற்றச்சாட்டுக்களை எழுதியிருந்தனர்.

ஊழல்வாதியான வடக்கு ஆளுநரை ஜனாதிபதி பதவி நீக்கம் செய்ய வேண்டும் எனவும் தவறும் பட்சத்தில் வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் சுற்றி வளைக்கப்பட்டு போராட்டம் நடத்தப்படும் எனவும் அவர்கள் எச்சரிக்கை விடுத்தனர்,

இந்த போராட்டம் குறித்து நேற்றே பொலிசாருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலின் அடிப்படையில் இன்று காலையிலிருந்து நூற்றுக்கும் மேற்பட்ட பொலிசார் களமிறக்கப்பட்டு வடக்கு மாகாண ஆளுநர் செயலக வளாகத்திற்கு பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது (03)

## இலங்கை மக்களி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வன்முறையால் ஏற்படும் வலியுடன் தொடர்ந்து வாழ்கின்றார்கள்.

இதன்காரணமாகவே கடந்த ஆண்டு கனேடிய நாடாளுமன்றம் மே 18 ஆம் திகதியை தமிழ் இனப்படுகொலை நினைவு தினமாகப் பிரகடனப்படுத்தும் பிரேரணையை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

மதம், நம்பிக்கை மற்றும் பன்மைத்துவ சுதந்திரத்துக்கு அழைப்பு விடுக்கும் தீர்மானங்களை இலங்கை ஏற்றுக்கொள்வது என்பது எதிர்வரும் ஆண்டுகளில், அந்த நாட்டில் அமைதி மற் றும் நல்லிணக்கத்தைப் பாதுகாப்பதற்கான அத்தியாவசிய கூறுகளாகும். இந்தநிலையில் உல கெங்கி லும் உள்ள மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான பணியைத் தொடருவோம்.

மனித உரிமை மீறல்களுக்குப் பதிலளிக்கும் வகையில், நான்கு இலங்கை அரச அதிகாரிகளுக்கு எதிராக தமது அரசு தடைகளை விதித்தது.

இதேவேளை, கனடா அரசின் சார்பாக, தமிழ் கனேடியர்கள், நாட்டுக்கு ஆற்றிய பல பங்களிப்புக்களை அங்கீகரிக்க அனைத்து கனேடியர்களுக்கும் அழைப்பு விடுக்கிறேன்.

இலங்கையின் ஆயுத மோதலின் தாக்கம் பற்றி அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும்.

அத்துடன் இலங்கையில் பாதிக்கப்பட்ட அல்லது அன்புக்குரியவர்களை இழந்த அனைவருக்கும் ஒற்றுமையை வெளிப்படுத்துங்கள் என்றும் கனேடிய மக்களிடம் கோரிக்கை விடுக்கின்றேன். – என்றுள்ளது. (02)

## சர்வதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனநாயகரீதியாகவும் சமத்துவமாகவும் பிரதிநி தித்துவம் செய்யப்படவேண்டும், நீடித்த அமைதியான அரசியல் தீர்வைக் காண்பதற்குப் பொது–வாக்கெடுப்பை நடத்த வேண்டும்

எனக்கோரும் இருகட்சித்தீர்மானத்தைத் சமர்ப்பித்துள்ளனர்.

முள்ளிவாய்க்கால் தமிழ் இன அழிப்பின் 14 வருட நினைவேந்தல் நிகழ்வுகளில் தமிழர்கள் ஈடுபட்ட தருணத்திலேயே அமெரிக்கா காங்கிரஸ் உறுப்பினர்கள் இந்தத் தீர்மானத்தை சமர்ப்பித்துள்ளனர்.

அமெரிக்க பிரதிநிதிகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தீர்மானம் தமிழர் தாயகப்பகுதிகளை இலங்கை இராணுவம் தொடர்ந்தும் ஆக்கிரமித்துள்ளதாகவும் ஒடுக்குமுறையில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

தமிழ் மக்கள் தங்கள் சுதந்திரத்துக்காகக் குரல் எழுப்புவதைத் தடுக்கும் திருத்தச்சட்டம் காரணமாகக் கருத்துசுதந்திரம் பாதிக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் சமர்ப்பித்துள்ள தீர்மானம் தெரிவித்துள்ளது.

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தவேண்டும், ஈழத் தமிழர்களின் பாராம்பரிய தாயகத்தை அங்கீகரிக்கவேணடும் எனவும் அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் தங்கள் தீர்மானத்தின் நகலில் தெரிவித்துள்ளனர்.

(5)

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு


# கோட்டாபயவைக் கைதுசெய்யவேண்டும் கனடா கென்சவேர்ட்டிவ் தலைவர் வலியுறுத்து

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவைக் கைதுசெய்யவேண்டும் என கனடாவின் கென்சவேர்ட்டிவ் கட்சியின் பியரே பொய்லிவ்வேர வேண்டுகோள் விடுத்துள்ளார்.

முள்ளிவாய்க்கால் தமிழின படுகொலையின் 14 வருடத்தை குறிக்குமுகமாக விடுத்துள்ள அறிக்கையில் அவர் இந்தவேண்டுகோளை விடுத்துள்ளார்.

கோட்டாபய ராஜபக்சவைக் கைதுசெய்யவேண்டும், அதன் மூலம் அவர் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் தனது குற்றங்கள் தொடர்பாகப் பதிலளிக்கும் நிலையை ஏற்படுத்தலாம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை யுத்தத்தில் சிக்குண்டதால் இலங்கையில் தமிழ்மக்களும் ஏனைய சமூக குழுக்களும் 25 வருடங்களாகக் கற்பனை செய்ய முடியாத துயரங்களில் சிக்குண்டனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.



தசாப்தகால வன்முறையும் அழிவும் எண்ணிக்கையற்ற இலங்கையர்களின் மரணத்துக்குக் காரணமாக அமைந்துள்ளன என குறிப்பிட்டுள்ள அவர் அமைதியையும் சுதந்திரத்தையும் தவிர வேறு எதனையும் வேண்டாத ஆயிரக்கணக்கான தமிழர்கள் மோதலின் இறுதி மாதங்களில் கொல்லப்பட்டனர் எனவும் தெரிவித்துள்ளார்.

தமிழ் இனப்படுகொலை நினைவேந் தல் தினத்தில் இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தின் இறுதி தருணங்களில் கொல்லப்பட்ட ஆயிரக்கணக்கான மக்களின் நினைவுகளை நாங்கள் கௌரவிக்கின்றோம்,கொல்லப்பட்ட -பாதிக்கப்பட்ட - அறிந்தவர்கள் அறியாதவர்களை, இலங்கையின் வரலாற்றில் இருண்ட யுகத்தில் இனப்படுகொலை யுத்தகுற்றங்கள் அநீதிகளால் பாதி;க்கப்பட்டவர்களை நாங்கள் நினைவு கூறுகின்றோம் எனவும் கனடாவின் கென்சவேர்ட்டிவ் கட்சியின் தலைவர் தெரிவித்துள்ளார்.

கடந்தகாலங்களின் காயங்களை எதிர்காலத்துக்கான நம்பிக்கைகளாக மாற்ற முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ராஜபக்ச அரசாங்கத்தை எதிர்ப்பதில் உலகிற்குத் தலைமைதாங்கிய கனடாவின் முன்னையை கென்சவேர்ட்டிவ் அர சாங்கங்களைத் தற்போதைய அரசாங்கம் பின்பற்றவேண்டும், ராஜபக்ச அரசாங்கம் இழைத்த இனப்படுகொலை மற்றும் ஏனைய கண்டிக்கத்தக்க குற்றங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து 2013 இல் பொதுநலவாய உச்சிமாநாட்டைக் கனடா புறக்கணித்தது, ஏனைய நாடுகளும் இதனைப் பி;ன்பற்றி ராஜபக்ச ஆட்சியாளர்களைப் புறக்கணிக்கும் நிலையை ஏற்படுத்தியது. உலகம் தமிழ் மக்களிற்கு ஆதரவாக நி;ன்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த இனப்படுகொலையில் ஈடுபட்டவர்களைப் பொறுப்புக்கூறுமாறு கென்சர்வேர்ட்டிவ்கள் இன்று வேண்டுகோள் விடுக்கின்றனர். குறிப்பாக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயராஜபக்சவை கைது செய்யவேண்டும் என்ற இலங்கையின் மனித உரிமை பரப்புரையாளர்களின் வேண்டுகோள்களுடன் நாங்கள் இணைந்து கொள்கின்றோம் இதன் மூலம் அவர் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் தனது குற்றங்கள் தொடர்பாகப் பதிலளிக்க முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (5)

# ஜனாதிபதி ரணில் தலைமையில் தேசிய போர்வீரர் நினைவேந்தல்!

முப்பதாண்டுகளில் உயிரிழந்த தேசத்தின் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக 14 ஆவது தேசிய போர்வீரர் நினைவேந்தல் நிகழ்வு இன்று (வெள்ளிக்கிழமை) ஸ்ரீஜயவர்தன புர தேசிய போர்வீரர் நினைவுத் தூபியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இடம்பெறவுள்ளது.



பாதுகாப்பு அமைச்சு மற்றும் இராணுவத் தலைமையகத்தின் ஒருங்கிணைப்பின் கீழ் படைவீரர் சேவைகள் அதிகாரசபையால் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தேசிய போர் வீரர் தின நிகழ்வை நடத்துவது தொடர்பான ஆரம்பக்கட்ட கலந்துரையாடல் , தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகர் சாகல ரத்நாயக்கவின் தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன் போது கருத்து வெளியிட்ட பாதுகாப்பு செயலாளர் ஓய்வு பெற்ற ஜெனரல்கமல் குணரத்ன, இந்த ஆண்டு பெருமை மிக்க வகையில் தேசத்தின் போர்வீரர்களை நினைவுகூரும் நினைவேந்தல் நிகழ்வு நடைபெறவுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

தாய்நாட்டின் ஆட்புல ஒருமைப்பாட்டைக் காக்கத் தம் இன்னுயிர்களைத் தியாகம் செய்த பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்புப் படைகளின் மாவீரர்களை நினைவுகூரும் வகையில், அவர்களைப் பாராட்டும் வகையில் விசேட போர்ப்பறை இசையுடன் மலர் அஞ்சலி செலுத்தப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டுக்காக உயிர் தியாகம் செய்த மாவீரர்களின் பெற்றோர், உறவினர்கள் தேசிய போர்வீரர் நினைவேந்தலில் பங்குபற்றவுள்ளனர். இறந்த போர்வீரர்களுக்கு நினைவு ஆடைகள் வழங்கப்படுவதுடன், பௌத்த மற்றும் பிற மத வழிபாடுகளும் இடம்பெறவுள்ளன.

பின்னர் தேசிய போர்வீரர்கள் நினைவிடத்தில் மலர் தூவி அஞ்சலி செலுத்தப்படும். இங்கு முப்படை அணிவகுப்பு நடத்தப்பட்டு இராணுவ வீரர்கள் கௌரவிக்கப்படஉள்ளனர். இந்த ஆண்டு நடைபெறவுள்ள போர்வீரர்கள் நினைவேந்தல் நிகழ்வில் அரசியல் உரைகள் எவையும் இடம்பெறப் போவதில்லை. முப்படைத் தளபதிகள், பாதுகாப்பு படைகளின் பிரதானி மற்றும் அரசியல் கட்சிகளின் தலைவர்களின் பங்குபற்றுதலுடன் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் , பீல்ட் மார்ல் சரத் பொன்சேகாவும் கலந்துகொள்ளவுள்ளார் எனத் தெரிவித்தார். (5)

# ஜனாதிபதித் தேர்தலில் ரணிலை சவாலுக்குட்படுத்த முடியாதாம்

## அடித்துக் கூறுகிறார் ஐ.தே.க. தவிசாளர் வஜிர அபேவர்த்தன

நாட்டில் அடுத்துவரும் ஜனாதிபதி தேர்தலில் தேசிய தலைவராக ரணில் விக்ரமசிங்க வேட்பாளராக நிற்பார். அவரை சவாலுக்குட்படுத்த யாருக்கும் முடியாது.



அத்துடன் நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரமடையச் செய்த பின்னே தேர்தலுக்கு செல்ல முடியும் என ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தாவில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது தொடர்பில் அரசாங்கம் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. என்றாலும் ஒருசில கட்சிகள் தங்களின் ஜனாதிபதி வேட்பாளர் இவர் தான் எனத் தெரிவித்து, இன்பம் கண்டு வருகின்றன.

அது தொடர்பில் நாங்கள் அலட்டிக் கொள்ளவில்லை. என்றாலும் ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்ரமசிங்க தேசிய தலைவராகப் போட்டியிட இருக்கிறார்.

அதனால் ஐக்கிய தேசிய கட்சி உட்பட பல கட்சிகள் இணைந்து ரணில் விக்ரமசிங்கவை ஜனாதிபதியாக்குவதற்கு நடவடிக்கை எடுப்போம்.

அத்துடன் வீழ்ச்சியடைந்திருக்கும் நாட்டை மீளக் கட்டியெழுப்புவதாகத் தெரிவித்தே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நாட்டைப் பொறுப்பேற்றார்.

தற்போது அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்காக அவர் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் வெற்றியளித்து வருகின்றன.

டொலரின் பெறுமதி வீழ்ச்சியடைந்து வருகிறது. அதனால் பொருள்களின் விலை குறைவடைந்து வருகிறது. அதனால் ரணில் விக்ரமசிங்க மீது மக்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

அதனால் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்ரமசிங்க தேசிய தலைவராகவே போட்டியிட இருக்கிறார். ரணில் விக்ரமசிங்கவை சவாலுக்குட்படுத்த யாருக்கும் முடியாது. அத்துடன் தற்போது வீழ்ச்சியடைந்து வரும் டொலரின் பெறுமதியை 200 ரூபா வரை வீழ்ச்சியடையச் செய்ய ஜனாதிபதி நடவடிக்கை எடுப்பார் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கிறது.

அடுத்துவரும் தமிழ், சிங்கள புத்தாண்டாகும்போது மக்கள் எதிர்பார்ப்பதைவிட பொருள்களின் விலை குறைவடைந்து பொருளாதாரத்தை ஸ்திரமான நிலைக்குக் கொண்டுவர முடியுமாகும்.

பொருளாதாரம் ஸ்திரமான நிலைக்கு வந்த பின்னர் நாட்டில் முக்கியமான எந்த தேர்தலுக்கும் செல்ல முடியும். – என்றார். (5)

# கிழக்கு மாகாண மக்களுடைய பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் விசேட நடமாடும் சேவை

## நீதி அமைச்சு அறிவிப்பு

நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் கலாநிதி விஜயதாஸ ராஜபக்சவின் ஆலோசனைக்கு அமைய கிழக்கு மாகாண மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் விசேட நடமாடும் சேவையொன்று எதிர்வரும் 26 மற்றும் 27 ஆம் திகதிகளில் முன்னெடுக்கப்படவுள்ளது.

திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களைத் தளமாகக் கொண்டு இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக நீதியமைச்சின் கீழ் இயங்கும் தேசிய ஒருமைப்பாட்டுப் பிரிவின் உதவிச் செயலாளர் சந்தமாலி பிரதாபசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் தெளிவுபடுத்தும் விசேட ஊடகவியலாளர் சந்திப்பு நீதி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதன்போது கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில் –

வடமாகாண மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கும் நோக்கில் கடந்த காலங்களில் வடமாகாணத்தில் மூன்று விசேட நடமாடும் சேவைகள் இடம்பெற்று யுத்தம் காரணமாக நாட்டில் இருந்து வெளியேறி மீளவும் இந்தியாவில் இருந்து வந்த மக்களின் பிரச்சினைகள் உட்பட பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட்டது.

இதற்கிடையில் அனைத்து கிராமப்புற சேவை பிரிவுகளையும் உள்ளடக்கும் வகையில் தேசிய நல்லிணக்க சகவாழ்வு குழுக்களை நிறுவ நீதி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

அதற்கமைவாக கிழக்கு மாகாண மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் விசேட நடமாடும் சேவையொன்று முன்னெடுக்கப்படவுள்ளது. திருகோணமலை மாவட்ட நடமாடும் சேவை எதிர்வரும் 26ஆம் திகதி திருகோணமலை மாவட்ட செயலக வளாகத்திலும், 27ஆம் திகதி மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி வளாகத்திலும் நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்ட மக்களும் இந்த நடமாடும் சேவைகள் மூலம் வழங்கப்படும் வசதிகளை திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மையங்களுக்கு சென்று பெற்றுக் கொள்ள முடியும்.

பிறப்பு மற்றும் இறப்புச் சான்றிதழ்களைப் பெறுதல், தேசிய அடையாள அட்டைகள், காணி மீள்குடியேற்றப் பிரச்சினைகள் தொடர்பில் பிரச்சினைகளை எதிர்கொள்ளும் மக்கள் இந்த நடமாடும் வேலைத்திட்டத்தின் ஊடாகப் பயன்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேலும் நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் கீழ் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்துக்கான அலுவலகம், காணாமல் போனோர் அலுவலகம், இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு, ஆட்பதிவுத் திணைக்களம், பதிவாளர் திணைக்களம், வெளிவிவகார அமைச்சின் தூதரகப் பிரிவு, பாதுகாப்பு அமைச்சு, வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு, மாகாண காணி ஆணையாளர் அலுவலகம், குடிவரவுத் திணைக்களம் ஆகியவற்றின் அதிகாரிகள் பங்குபற்றவுள்ளனர்.

அமைதி மற்றும் நல்லிணக்கத்தை மேம்படுத்தும் நோக்கில் மாவட்ட செயலக மட்டத்தில் திரைப்படத் திரையிடல் நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் முதல் காட்சி 26 ஆம் திகதி முற்பகல் 11.00 மணிக்கு திருகோணமலை மாவட்ட செயலக வளாகத்தில் நடைபெறவுள்ளது. – என்றார். (5)

# முறையற்ற செயற்பாடுகளை சுட்டிக்காட்டி மக்களுக்காக குரல் கொடுத்தமையால் நான் பதவி நீக்கப்படவுள்ளேன்!

## எம்.பிக்கள் மனச்சாட்சியுடன் செயற்படவேண்டும் என ஜனக ரத்நாயக்க ஆதங்கம்

மின்சாரத்துறை அமைச்சரின் முறையற்ற செயற்பாடுகளை சுட்டிக் காட்டி, மக்களுக்காக குரல் கொடுத்ததால் பதவி நீக்கப்படவுள்ளேன்.



225 நாடாளுமன்ற உறுப்பினர்களும் மனசாட்சியுடன் செயற்பட வேண்டும். மின்சாரத்துறை அமைச்சர் அறிவுடன் செயற்பட வேண்டும் அல்லது அறிவார்ந்த தரப்பினரது ஆலோசனைகளுக்கு அமைய செயற்பட வேண்டும்.

இந்த இரண்டையும் தவிர்த்து தன்னிச்சையாக செயற்பட்டால் முரண்பாடுகள் மாத்திரமே மிகுதியாகும் என இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

மின்சாரத்துறை கட்டமைப்பு தொடர்பில் மின்வலுத்துறை அமைச்சர் எடுத்த முறையற்ற தீர்மானங்களை அறிவுபூர்வமாகச் சுட்டிக்காட்டியதால் அவரது அழுத்தத்துக்கு அமைய என்னை பதவி நீக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

என்னை பதவி நீக்கம் செய்யும் குற்றப்பிரேரணை எதிர்வரும் 24 ஆம் திகதி நாடாளுமன்றத்துக்கு கொண்டு வரப்பட்டவுள்ளது.

முறையற்ற மின்கட்டண அதிகரிப்புக்கு எதிர்ப்பு, பரீட்சை காலத்தில் மின்விநியோகம் தடை செய்யப்பட்டமைக்கு எதிர்ப்பு, நிலக்கரி கொள்வனவின் முறைகேடு ஆகியவற்றுக்கு எதிர்ப்பு தெரிவித்தமை ஆகியன எனக்கு எதிரான குற்றப்பத்திரத்தில் பிரதான குற்றச்சாட்டுக்களாக உள்வாங்கப்பட்டுள்ளன.

இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு சுயாதீனமானது. ஆணைக்குழு சுயாதீனமாக செயற்படும் போது மின்சாரத்துறை அமைச்சர் காஞ்சன விஜேசேகர அரசியல் அதிகாரத்தைப் பிரயோகித்து தன்னிச்சையாக செயற்பட்டார். மின்சாரத்துறை அமைச்சருக்கு இந்த துறை சார் அறிவு கிடையாது. துறைசார்ந்த தரப்பினர் முன்வைக்கும் ஆலோசனைகளைக் கேட்கும் மனநிலையும் அவருக்குக் கிடையாது.

நான் நாட்டு மக்களுக்காகவே செயற்பட்டேன். 225 மக்கள் பிரதிநிதிகளை மக்களே தெரிவு செய்துள்ளார்கள். ஆகவே, எனக்கு எதிரான குற்றப்பிரேரணை தொடர்பில் மக்கள் பிரதிநிதிகள் மனசாட்சியுடன் செயற்பட வேண்டும். என்னை பதவி நீக்குவதால் பொருளாதார ரீதியில் எனக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது. ஆனால் மக்களுக்காக குரல் கொடுக்கும் நிலை இல்லாமல் போகும்.

என்னை பதவிநீக்குவதால் மின்கட்டமைப்பில் காணப்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்காது. மின்சாரத்துறை அமைச்சர் ஒன்று அறிவுடன் செயற்பட வேண்டும் அல்லது அறிவார்ந்த தரப்பினரது ஆலோசனைகளுக்கு அமைய செயற்பட வேண்டும். இவ்விரண்டையும் தவிர்த்து தன்னிச்சையாக செயற்பட்டால் முரண்பாடுகள் மாத்திரமே மிகுதியாகும். – என்றார். (5)

# சகோதரர்களுக்கு இடையில் மோதல் கொழும்பு புறநகரில் துப்பாக்கி சூடு!

கொழும்பின் புறநகர் பகுதியான கடவத்தை பிரதேசத்தில் நேற்று (வியாழக்கிழமை) பிற்பகல் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் காயமடைந்து ராகம வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கடவத்தை, சூரியபாலுவ பிரதேசத்தைச் சேர்ந்த 50 வயதுடைய நபரே இந்தச் சம்பவத்தில் காயமடைந்துள்ளார்.

குறித்த நபர் தனது வீட்டுக்கு அருகில் உள்ள வீதியில் நின்றிருந்த சந்தர்ப்பத்தில் குறித்த இடத்திற்கு வந்த மூவர் துப்பாக்கியால் சுட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பின்னர் அந்த நபர்கள் காயமடைந்த நபரின் மனைவியைத் தாக்கிவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான நபரின் சகோதரர் ஒருவரும், சகோதரரின் மகனும் மேலும் ஒருவரும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் கணேமுல்ல மற்றும் யக்கல பிரதேசத்தை சேர்ந்த 56, 20 மற்றும் 25 வயதுடையவர்கள் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காணித்தகராறு காரணமாக துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாக மேலதிக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர்களுடன் துப்பாக்கிசூட்டுக்குப் பயன்படுத்தப்பட்டரைபிள் ரக துப்பாக்கி மற்றும் அவர்கள் வந்த ஓட்டோவும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. சந்தேகநபர்கள் இன்று மஹர நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர். (5)



காலைக்கதிர் மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மனச்சாட்சிப்படி வாக்களியுங்கள்

**இலங்கைப் பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் தலைவரைப் பதவி விலக்குவதற்கான நாடாளுமன்ற வாக்கெடுப்பு வைகாசி 24 இடம்பெறவுள்ளது. சுயாதீன ஆணைக்குழு ஒன்றின் தலைவரை அவரது பதவியிலிருந்து விலக்குவதற்கு எடுக்கப்பட்டுள்ள இந்த நடவடிக்கை அத்தகைய ஆணைக் குழுக்களுக்கு விடுக்கப்படும் சாவு மணி.**

**ஆட்சியாளர்கள் விரும்பியபடி மின்சாரக் கட்டணத்தை உயர்த்துவதற்கு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் இடமளிக்கவில்லை, இது விடயத்தில் எரிசக்தித்துறை அமைச்சர் காஞ்சன விஜயசேகரவுடன் முரண்பட்டார், அமைச்சருக்கு எதிராக ஊடகங்களில் விமர்சித்தார் ஆகியனதான் அவரைப் பதவி விலக்குவதற்கான ஆட்சியாளர்களின் முன்முனைப்புக்கான காரணங்கள்.**

**ஆட்சியாளர்கள் சொல்வதைக் கேட்டுச் செய்வதற்கு மட்டும்தான் ஆணைக்குழுக்கள் என்றால், அதற்கு எதற்கு சுயாதீன ஆணைக்குழுக்கள்? தேவையே இல்லை. துறைசார் அமைச்சரும் ஆட்சியாளர்களும் இடும் உத்தரவுகளைச் செயற்படுத்த அரச அதிகாரிகளே போதும். சுயாதீன ஆணைக்குழுக்கள் என்பதன் அர்த்தமே, அரசின் விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டு நின்று முடிவுகளை எடுத்துச் செயற்படுத்துவதற்கான கட்டமைப்பு என்பதுதான். அப்படியிருக்கும்போது சுயாதீனமாகச் செயற்பட்டமைக்காக ஆணைக்குழு ஒன்றின் தலைவரைப் பதவியில் இருந்து நீக்குவது என்பது ஏற்புடையதல்ல.**

**பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் மின் கட்டண உயர்வு தொடர்பில் மக்களின் பக்கம் நின்று செயற்பட்டார். மின்சாரக் கட்டணங்கள் பல மடங்கு உயர்த்தப்படுவதை அவர் எதிர்த்தார். ஒரேயடியாக அப்படிச் செய்யாமல் மின்சார உற்பத்திக்கு ஆகும் செலவுக்கு ஏற்ப கட்டண அதிகரிப்பை மேற்கொள்ளலாம் என்றார். பொருளாதார நெருக்கடியால் மக்கள் பெரும் அவதிக்குள்ளாகி இருக்கும் நேரத்தில் மின் கட்டண அதிகரிப்பு அவர்களுக்கு இன்னும் சுமையை ஏற்றறும் என்பதால் அவர், துறைசார் அமைச்சரது முடிவுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தார்.**

**சரியான, நியாயமான ஆட்சியாக இருந்தால் இது தொடர்பில் ஆணைக்குழுவுடன் பேச்சு நடத்தி ஓர் இணக்கப்பாட்டுக்கு ஆட்சியாளர்கள் வந்திருக்கவேண்டும். ஆணைக்குழுவின் சுயாதீனத்தன்மைக்கு மதிப்பளிப்பதுடன் தனது நோக்கத்தை எப்படி நிறைவேற்றுவது என்று ஆராய்ந்திருக்கவேண்டும். ஆனால், அதனைச் செய்யாமல் முரட்டுத்தனமாக ஆணைக்குழுவுடன் மோதிய ஆட்சியாளர்கள், தமது அதிகாரப் பலத்தை வைத்து ஆணைக்குழுவின் சுயாதீனத் தன்மையை ஒன்றுமில்லாமல் ஆக்கினார்கள். ஆணைக்குழுவின் உள்ளே புகுந்து அதன் உறுப்பினர்களைத் தம் வசப்படுத்தி ஆணைக்குழுத் தலைவருக்கு எதிரான நிலைப்பாட்டை எடுக்கவைத்து ஆணைக்குழுக்களையே கேவலப்படுத்தினார்கள்.**

**இப்போது அதற்குமேலும்சென்று ஆணைக்குழுவின் தலைவரைப் பதவி நீக்கம் செய்வதற்கும் முயற்சிக்கிறார்கள். இதுவொரு மிக மோசமான அரசியல் முன்னுதாரணம். ஆட்சியாளர்கள் சொல்வதைச் செய்யாத ஆணைக்குழுவின் தலைவர்கள் பதவியில் இருந்து தூக்கி எறியப்படுவார்கள் என்பதுதான் அந்த மோசமான முன்னுதாரணம். அப்படியான ஆணைக்குழுக்கள் இருப்பதிலும் பார்க்க அவற்றைக் கலைத்துவிடுவதே மேல். ஆட்சியாளர்களுக்கு ஆமாம் போட்டு, ஒரு ஆணைக்குழு பெயருக்கு இருப்பதிலும் பார்க்க இல்லாமல் இருப்பதே மேல், என்பதால் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தத்தம் மனச்சாட்சியைத் தொட்டு இது விடயத்தில் வைகாசி 24 வாக்களிக்கவேண்டும்.**

# இராணுவத்துக்கு கிடைத்த தகவலுக்கமையவே கொழும்பில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தல்!

## வஜிர அபேவர்த்தன இப்படிக் கருத்து

நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு நாட்டின் பாதுகாப்பு முக்கியமாகும். அதனால் இராணுவத்துக்கு கிடைத்த தகவல் ஒன்றுக்கமைய கொழும்பில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

அரசாங்கம் என்றவகையில் நாட்டையும் மக்களையும் பாதுகாப்பது முக்கிய கடமையாகும் என ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு நாட்டின் பாதுகாப்பு மிகவும் முக்கியமாகும். மிகவும் மோசமான முறையில் வீழ்ந்திருக்கும் பொருளாதாரத்தை சீர்செய்து, அபிவிருத்தி செய்ய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நடவடிக்கை எடுத்து வருகிறார்.

இவ்வாறான நிலையில் பொது மக்கள் மிகவும் அவதானமாக இருக்கவேண்டும். ஏனெனில் நாட்டின் பாதுகாப்பு தொடர்பில் சந்தேகங்களை ஏற்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

அதனால் ஜனாதிபதியின் நாட்டை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டத்துக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

அத்துடன்கடந்தசிலதினங்களாக கொழும்பில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. இரணுவத்தினருக்கு கிடைக்கப்பெற்றதகவல் ஒன்றுக்கு அமையவே இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் கொழும்புக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

அரசாங்கம் என்றவகையில் நாட்டையும் மக்களையும் பாதுகாப்பது முக்கிய கடமையாகும். தேசிய பாதுகாப்புக்கு பாதிப்பு ஏற்படும் சந்தர்ப்பங்களில், அது தொடர்பான சட்டங்களைக் கடுமையாக்குமாறு தெரிவிக்கப்படுகிறது. ஆயுதம் வைத்திருப்பவர்களை கைதுசெய்யலாம்.

ஆயுதம் ஏந்தாத பயங்கரவாதிகளை எப்படி கைதுசெய்வது என்பது தொடர்பாகப் புதிய சட்டங்களை உருவாக்க வேண்டும். அதற்காகவே பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை ஏற்படுத்தி இருக்கிறோம்.

அதேநேரம் உலகில் தொழிநுட்பம் வளர்ச்சியடைந்துள்ள நிலையில் அந்த தொழிநுட்பத்துக்கு ஏற்ற புதிய கண்டுபிடிப்புக்கள் செய்யப்பட வேண்டும்.

எனவே நாட்டின் பாதுகாப்புக்கு புதிய விதிகள் மிகவும் முக்கியம். அதனால் ஆயுதங்கள் இல்லாவிட்டாலும் மனதில் ஆயுதம் ஏந்தியவர்களை அடையாளம் காணத் தேவையான நடைமுறைகள் செய்யப்பட்டுள்ளன.

மேலும் நாட்டில் ஸ்திரத்தன்மை ஏற்படும்போது, அதனை அழிக்க வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சக்திகள் இந்த நாட்டில் செயற்படுகின்றன.

எனவே அவர்களை அடையாளம் காணக்கூடிய வகையில் சட்ட அமைப்பை தயாரிப்பது எமது கடமை. அதனை நாட்டை நேசிக்கின்ற அனைவரும் ஒன்றுபட்டு ஏற்படுத்துவதற்கு முன்வரவேண்டும். – என்றார். (5)

# தலைமன்னாரில் மாணவிகள் கடத்தல் முயற்சி சந்தேகநபர்கள் அடையாளம் காட்டப்பட்டனர்



தலைமன்னார் பகுதியில் மூன்று மாணவிகளைக் கடத்த முற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டு தலைமன்னார் பொலிஸாரால் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட இரு சந்தேக நபர்களுக்கான அடையாள அணிவகுப்பில் மூன்று சிறுமிகளும், இரு சந்தேக நபர்களையும் அடையாளம் காட்டியுள்ளனர். தலைமன்னார் கிராமம் பகுதியில் மூன்று சிறுமிகளை வெள்ளை வானில் கடத்த முற்பட்டதாக இரு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு மன்னார் நீதிவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட நிலையில் அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இவர்களுக்கான வழக்கு விசாரணை மீண்டும் நேற்று (வியாழக்கிழமை) மன்னார் நீதிவான் நீதிமன்றில் நீதிபதி கே.எல்.எம். சாஜீத் முன்னிலையில் அழைக்கப்பட்டு சந்தேக நபர்களை அடையாளம் காட்டுவதற்காக நீதிமன்றம் மூடப்பட்ட நிலையில் அடையாள அணிவகுப்பு இடம் பெற்றது.

இதன்போது பாதிப்புகளுக்குள்ளான மூன்று சிறுமிகளும் இரு சந்தேக நபர்களையும் அடையாளம் காட்டியுள்ளனர்.

நடைபெற்ற இந்த அடையாள அணிவகுப்பு ஒரே நேரத்தில் இரு சந்தேக நபர்களுடன் மேலும் 14 பேர் இந்த அணிவகுப்பில் நிறுத்தப்பட்டிருந்த நிலையில் நீதிவான், முதலியார், ஆராய்ச்சி மற்றும் இந்த வழக்குக்கு முன்னிலையாகும் சட்டத்தரணிகள் மட்டுமே மன்றுக்குள் இருந்த நிலையில் இந்தச் சிறுமிகள் சந்தேக நபர்களை அடையாளம் காட்டியுள்ளனர்.

கடந்த 11.05.2023 அன்று வியாழக்கிழமை மாலை தலைமன்னார் கிராம பகுதியில் சிலுவை நகர் பகுதியில் வெள்ளை வானில் சொக்கிலேற் பிஸ்கட் விற்பனைக்காக சென்றதாக கூறப்படும் இருவர் மூன்று சிறுமிகளுக்கு சொக்கிலேற் தருவதாக அழைத்து அவர்களைக் கடத்த முற்பட்டனர் எனத் தெரிவித்து இவர்களை அக்கிராம மக்கள் பிடித்து தலைமன்னார் பொலிஸில் ஒப்படைத்திருந்திருந்தனர் .

சந்தேகநபர்கள் சார்பாக சட்டத்தரணிகள் சர்மினி பிரதீபன், அர்ஜுன் அரியரட்ணம், ரூபன்ராஜ் டபேரா மற்றும் டெனிஸ்வரன் ஆகியோர் முன்னிலையாகினர். இந்தச் சந்தேக நபர்களை எதிர்வரும் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார். (5)

# சுமந்திரன் எம்.பியை மறைமுகமாக தாக்கிய சீனித்தம்பி யோகேஸ்வரன்



யாழ்ப்பாணத்திலிருந்து ஓர் இனம் வெளியேற்றப்பட்டது, அதற்கு இனச்சுத்திகரிப்பு எனக் கூறுபவர்கள் எங்கள் இனம் அழிக்கப்பட்டமைக்கு எமது இனப்படுகொலை செய்யப்பட்டது எனக்கூறத் தயங்குகின்றார்கள் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் தெரிவித்தார்.

மேலும், உண்மையில் இந்த இனப்படுகொலைக்கு நீதி வேண்டும். இதற்காக சர்வதேசம் எமக்கு உதவ வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மட்டக்களப்பு – அம்பாறை இலங்கைத் தமிழரசுக் கட்சிக் கிளை ஏற்பாடு செய்த வலிசுமந்த முள்ளிவாய்க்கால் நிகழ்வின் 14 ஆவது நிறைவை அனுஷ்டிக்கும் முகமாக நாவிதன்வெளி 15 ஆம் கிராமம் ஸ்ரீ முருகன் ஆலய வீதியில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் கலந்து கொண்டு மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். ஆனால் எங்களது அரசியல்வாதிகள் சிலர் கூட இன்று இனப்படுகொலை என கூறுவதற்கு வாய் கூசினவர்களாக இருக்கின்றனர்.

யாழ்ப்பாணத்தில் ஓர் இனம் வெளியேற்றப்பட்டது. அதற்கு இனச்சுத்திகரிப்பு எனக் கூறுபவர்கள் எங்கள் இனம் அழிக்கப்பட்டமைக்கு எமது இனப்படுகொலை செய்யப்பட்டது எனக் கூறத் தயங்குகின்றார்கள்.

உண்மையில் இந்த இனப்படுகொலைக்கு நீதிவேண்டும். இதற்காக சர்வதேசம் எமக்கு உதவவேண்டும்.

இந்த இறந்த ஆத்மாக்கள் எந்த நோக்கத்துக்காக செயற்பட்டதோ நாமும் அதற்காகவே செயற்படத் தயாராக வேண்டும். அவர்களின் தியாகங்கள் நிறைவேற்றப்பட வேண்டும்.

அதற்காக இலங்கைத் தமிழரசுக் கட்சியினர் ஒற்றுமையாக உழைக்க கடமைப்பட்டுள்ளோம் என அவர் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வின் போது நாவிதன் வெளி 15 ஆம் கிராமம் ஸ்ரீ முருகன் ஆலயத்தில் கூட்டுவழிபாடு இடம்பெற்றது. பின்னர் பூசையை தொடர்ந்து நினைவுச் சுடர் மாவீரர் குடும்பம் சார்பாக இரு தாய்மார் ஏற்றினர்.

அத்துடன் ஒரு நிமிடம் மௌன அஞ்சலியுடன் ஏனையோர் சுடர் ஏற்றினர். மேலும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், தமிழரசுக்கட்சி ஆதரவாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (5)

# ஆயுதப் போரால் இலங்கையில் படுகொலை செய்யப்பட்ட தமிழர்கள் தொடர்பாக மனம் திறக்கும் கனேடிய பிரதமர்



*இலங்கையில், 14 ஆண்டுகளுக்கு முன்பு முடிவுக்கு வந்த ஆயுதப் போரின் போது ஏற்பட்ட துயர்நிறைந்த உயிரிழப்புக்கள் குறித்து இன்று நாம் ஆழ்ந்து சிந்திக்கின்றோம் என கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, தமிழ் இனப்படுகொலை நினைவேந்தல் நாளை முன்னிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*முள்ளிவாய்க்கால் படுகொலை உட்பட்ட சம்பவங்களில் பல பத்தாயிரம் தமிழர்கள் உயிரிழந்து, மேலும் பலர் காணாமல் ஆக்கப்பட்டார்கள், காயமடைந்தார்கள் அல்லது இடம்பெயர்க்கப்பட்டார்கள்.*

*அர்த்தமற்ற இந்த வன்முறையால் ஏற்பட்ட வேதனையுடன் வாழும் போரால் பாதிக் கப்பட்டவர்கள், தப்பிப் பிழைத்தோர் மற்றும் அவர்களது அன்புக்குரியோர் ஆகியோரை நாம் இன்று நினைவில் கொள்கின்றோம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (5)*